# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி – 1969



பெப்ரவரி ~ 2002 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் உள்ளே


பெப்ரவரி - 2002

மலர் 34 ❄ இதழ் 01



ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA. 30000
Tel: 065 - 22723



விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 160/=
(தபாற்செலவு உட்பட)



அன்புடன் உங்களோடு - 1
மனத்திலொரு மீளாய்வு - 2
சிலுவை - 3
கவிதை - 4
மாற்றம் வேண்டும் - 5
தேவாலயத்திரை....... - 6
மாணவர் பக்கம் - 7
இலக்கிய மஞ்சரி - 10
மரணத்தின் அழைப்பு - 11
திருச்சபைச் செய்திகள் - 12
குற்ற உணர்வு - 14
கனவிடை தோய்ந்தது - 16
கிறிஸ்தவத்தில் வறுமை..... - 18
மனிதத்துவத்தில்..... - 20
நினைப்பதெல்லாம் - 21
விவிலியம் கற்போம் - 23
அறிவை வளர்ப்போம் - 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

மண்ணில் விதைக்கப்பட்டதெல்லாம் கண்ணி வெடிகளே !
மண்ணை வெட்டும் பொழுதெல்லாம் - வருவது
மனித மண்டை ஓடுகளே! வன் செயல்களின் விளைவுகள் தான் இவை.
இனப் பிரச்சனை என்ற பெயரில் இன வாதங்களும், தேர்தல்
என்ற பெயரில் கலவரங்களும் நடந்தேறி, இறைவனால் படைக்கப்பட்ட
ஈடு இணையற்ற மனித உயிர்களை அழித்தன, இறைவனால், மனிதனுக்குக்
கொடையாகக் கொடுக்கப்பட்ட மனித உயிர்கள் சூறையாடப்பட்டன.
மனிதனின் வாழும் அடிப்படை உரிமையில் அடாவடித்தனங்களும்,
அத்துமீறல்களும் அரங்கேறின.

இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதனின் வாழும் உரிமையில்
வையகத்தில் வாழ்வோர் கைவைக்க உரிமையில்லை.
மாண்புடன் வாழும் உரிமை அனைத்து மக்களாலும்
பாதுகாக்கப்படவேண்டும். உலகத்திலே பாதுகாப்பு
ஏற்படுத்தப்பட்டது, மனித உயிர்களைப்பாதுகாக்கத்தான்.
ஆயினும் அந்தப் பலத்த பாதுகாப்புக்களின் மத்தியிலும்,
உயிர்களும், உயிர்வாழ் உரிமைகளும் பறிபோகத்தான் செய்கின்றன.

இந் நிலை மாறி மனித மாண்புடன் வாழ,
அவனது உயிர்வாழும் உரிமை உறுதிப்படுத்தப்பட,
மனித மனங்களில் மன மாற்றம் தேவை. உன்னைப் போல்
அயலானையும் நேசி என்ற அருள்வாக்கை மனிதர்கள்
வாழ்வாக்க முற்பட்டால் வையகத்தில் ஒரு மாற்றம் ஏற்படும்.

அனைவரும் வாழ வேண்டுமென்பதற்காகத் தன்னையே சிலுவை மரத்தில்
கையளித்த இயேசுவின் இறப்பு, உயிர்ப்புக்களை நினைவு கூர
ஆயத்தமாகும் நாம் அந்த ஆயத்த நாட்களை தவக்காலத்தில்
அடுத்தவர் உயிர்களை மதிக்கவும், பாதுகாக்கவும் உறுதி பூணுவோம்.
மனிதன் உயிரைப் பறிக்கவும், மனிதனின் உயிர் வாழும் உரிமையைச்
சிதைக்கவும் முற்படும் தீய சக்திகளுக்குத்துணை போகாமல்
இருக்கவும்திடசங்கற்பம் கொள்ளுவோம்.

ஆசிரியர்




## இறைவாக்கு



இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து
அழுது புலம்பிக் கொண்டு உங்கள் முழு
இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்.

-யோவேல் 2/12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்திலொரு மீளாய்வு

'மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்' (மாற்கு 1 : 15) என்று குருவானவர், திருநீற்றுப் புதனன்று நெற்றியிலே நீறிட்டுத் தவக்காலத்தை ஆரம்பித்து வைக்கிறார். கிறிஸ்தவர்கள் தூய்மை யடைய ஏதுவாகப் பாவத்தை விட்டுவிட சங்கற்பம் எடுக்கிறார்கள், எனினும், பாவப் பிடியிலிருந்து விடுபட முடியாத நிலையினால் பிரதிவருடமும், தவக்காலத்தின்போது, இப்பிரதிக்ஞையைப் புதுப்பிக்க வேண்டியுள்ளது. அப்படியானால் மனம் மாறுவது என்றால் என்ன, அதற்கான அடிப்படை என்ன, என்னும் ஆணிவேர்க் காரணிகளைக் கண்டறிய வேண்டும்.

☛ ஒவ்வொரு தனிமனமும் விதவிதமான இயல் புகளைக் கொண்டிருக் கின்றன.

☛ இவற்றுள் நல்ல இயல்புகளும் தீய இயல் புகளும் கலந்தே காணப்படு கின்றன.

ஆனாலும், மனித மனங்கள் தீயஇயல்புகளின் பக்க சார்புடையன வாகவே காணப்படுகின்றன. ஏனெனில் மனிதன் பாவ இயல்பிலேயே விளைந்தவன். அவனுடைய மீறுதலே முதற்பாவம். பலி செலுத்துவதில் ஏற்பட்ட போட்டியே முதற் கொலைக்குக் காரணமாயிற்று. வருந்தி உழைத்தல், உடல் வேட்கை, பிரசவ வேதனை, மரண பயம் என்பன அந்தப் பாவத்துக்கான சாபங்கள். இத்தகைய பாவ இயல்புகளிலிருந்தும், சாப தோஷங்களிலிருந்தும் விடுபட முடியாமையினால் அவை வளர்ந்து, நாகரீகமாகி, நாள டைவில் நவீனத்துவமடைந்து இன்று, அவையே வாழ்க்கையு மாகிவிட்டது. மனிதன் இவற்றிலிருந்து உடனடியாக அல்லது ஒரே நாளில் மாறிவிடுவது கடினமான காரியமாகும். இதனாலேயே மேலெழுந்த வாரியாக மேற்கொள்ளப்படும் சங்கற்பங்களும், பிரதிக்ஞைகளும் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டி ஏற்படுகிறது.

எனவேதான், அதன் அடிநிலையை அறிவது அவசிய மாகிறது. தன்னைத்தானே மீளாய்வு செய்வது அறிதலின் ஆரம்ப மாகும். வாழ்க்கையின் வேகமான சூழற்சியிலிருந்து விடுபட்டு, அமை தியாகச் சிந்திக்கக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். ஓய்ந்த நிலையிலிருந்து மனத்தை மீளாய்வு செய்யுபோது நமது தவறுகள் துலாம்பரமாகின்றன. இதன் மூலம் மனதில் தெளிவும் உணர்விற் பக்குவமும் ஏற்படுகிறது. இது அனுபவப் பயிற்சி, ஆன்மீக வலுவூட்டல், இதைப் பழக்கப்படுத்திக்கொள்ளும் போது, மனதில் 'நான்' என்பது மட்டும்தான் வெளிப்படும். நெகிழ்வுத் தன்மை உருவாகும் போது அயலவன், உறவு, அக்கறை போன்ற அன்பு ஊற்றுக்கள் பீறிடுகின்றன. இவ்வூற்றுக்கள் மனித இயல்புகளை அசைத்து விடுகிறது, சுயநலன்கள் கழன்று, மன அழுத்தங்கள் விலக, அமைதி பிறக்கிறது: இதுவே அடிப்படை மாற்றமாகும்.

எவ்வாறாயினும், மனமாற்றம் அடைந்த ஒருவன் அதில் நிலைத்து நிற்பது சோதனை நிறைந்ததாகும் என்பதை பலருடைய அனுபவத்திலிருந்து அறியலாம். இதுபற்றி ஆயர் புல்ரன் ஷீன் (FULTON SHEEN) அவர்கள் தெரிவிக்கையில், 'தனிமனித நம்பிக்கை பேணுதற்குரியது: ஏனெனில் அது சமூகத்தை ஊடறுத்துச் செல்கிறது' என்கிறார். அதாவது, மனிதன் சமயத்தைவிட சமூகத்தில் அதிகம் வாழ்கிறான், அங்கே கிறிஸ்தவ நம்பிக்கை தளும்பல்க ளுக்குள்ளாகிறது. சமூகத்திலுள்ள நவீனங்கள் கிறிஸ் தவனின் இயல்களில் பற்றிக்கொள்ளும்போது அவன் தளர்ந்து விடுகி றான். எனவேதான் தனிமனித இயல்பு நம்பிக் கையுடன் பேணப்படவேண்டும். சமூக த்தில் புளிக்காரமாகச் செயல்பட்டுத் தூய இயல்பாக விளங்கி, அனை வரையும் ஈர்த்துக்கொள்ளும் விதத்தில் அது பேணப் படவேண்டும். 'நீங்கள் மண்ணுக்கு உப்பாயிருக்கிறீர்கள்' என்றும் 'உலகுக்கு ஒளியாய் இருக்கிறீர்கள்' (மத் 5: 13 – 14) என்றும் ஆண்டவர் சொன்னது இதைத்தான்.

பாவங்களின் பிறப்பிடம் மனிதமனம் அதனால் தான், 'மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்' (மாற்கு 1: 15) என்று ஆண்டவர் அழைக்கிறார். அதேவேளை, 'மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்' (லூக் 3:8) என்று திருமுழுக்கு யோவான் புதுப்படைப்பின் தன்மையில் நிலைத்துவாழ அழைக்கிறார். அறிஞர் ஜோண் மில்ரன் (JOHN MILTON) என்பவர், 'நிறைவாழ்வின் மாளிகையைத் திறந்துவிடும் தங்கச் சாவிதான் மனமாற்றம்' என்று அதன் பெறுமதியை மனித மொழியில் புரியவைக்கிறார்.


மாற்றம் பெறும் மனத்தை மீளாய்வு செய்யத் தவக்காலம் உந்துசக்தியளிக்கிறது, விடுதலையின் பாதையைக் காட்டும் விளக்காக ஒளிர்கிறது. அதன் வழிநடப்பவர்களை, 'என்னைவிட்டு விலகிய மக்களே திரும்பி வாருங்கள்' (எரேமியா 3:22) என்று ஆண்டவர் அன்புடன் அழைக்கிறார். ✦

❑ ***செல்லத்துரை ஜெயராஜா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவை



அந்நாளில் பாலஸ்தீனம், பாரசீகம், சிரியா, ரோமாபுரி, முதலிய நாடுகளில் மரண தண்டனை பெற்ற குற்றவாளிகளைச் சிலுவையில் அறைவது வழக்கமாக இருந்தது. தண்டனை அடைந்தவரை அவமானப்படுத்தவும் கொடூர வேதனைப் படுத்தவும் இவ்வாறு செய்தனர்.

சிலுவையை ஆங்கிலத்தில் 'CROSS' என்பார்கள். இலத்தீன் பெயர் குருக்ஸ்(CRUX) தமிழில் 'குருசு' என்கிறார்கள். (தமிழ்நாட்டுத் தூத்துக்குடி அருகில் 'குருசடித்தீவு' என்ற தீவு இருக்கிறது) இப் பொழுது சிலுவை என்கிறார்கள். இது சிரிய மொழிச் சொல்லை அடிப்படையாகக் கொண்டது. ( SLIBO) என்ற சிரிய மொழிச் சொல் சிரியக் கிறிஸ்தவர் வழியே மலையா ளத்துக்கு வந்தது. முதன் முதல் இதை சீகன்பால்கு 'சிலுவை' என்று தமிழில் ஒலி பெயர்த்தார்.

இன்று சிலுவை கிறிஸ்தவத்தின் அடையாளமாகத் திகழ்கிறது. 2ம் நூற்றாண்டிலிருந்து சிலுவையிடும் வழக்கம் தோன்றியது. வாழ்த்தும் போதும், விளக்கேற்றும் போதும், சாப்பிடும் போதும், ஆராதனையின் போதும், திருமுழுக்கின் போதும் நெற்றி யிலும் மார்பிலும் சிலுவையிடுவது வழக்கமாயிற்று. நெற்றியில் சிலுவை யிடுவது அறிவுப்பூர்வமாகவும், மார்பில் சிலுவை யிடுவது மனப்பூர்வ மாகவும் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்கு அடையாள மாகும். கோயில் கள், பீடங்கள் கல்லறைகளில் சிலுவை வைக்கும் வழக்கம் தோன்றியது. சிலுவையைக் கழுத்தில் அணிந்து கொள்கிறார்கள். சிலுவையை முத்தமிடுகிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்று வோரின் அடையாளமாக, மரியாதைக்குரிய பொருளாகச் சிலுவை விளங்குகிறது. 'திருடரெல்லாம் தொங்கு கிற கீழ்ப்பான சின்னம் முன் இன்று தியாகத்தின் சின்னமது தேவமகன் ஏறியதால்' என்று பாடுகின்றார், பேராசிரியர் முனைவர் மோசஸ் மைக்கல் பாரடே.

கி.பி 313ல் வெளியான மிலான் சாசனம் குற்றவாளிகளைச் சிலுவையில் அறைந்து கொல்லுவதைத். தடை செய்தது. சீனாவில் கடை வாசலில் சிலுவை தொங்கினால் அது அடகுக்கடை.

பாரிஸ் தேசிய நூலகத்தில் 1750ல் அச்சான 'சிலுவையின் மந்திரத்துக்கு விவேகம்' என்ற நூல் இருக்கிறது. 1844ல் புதுவையில் அச்சான 'சிலுவைப்பாதை என்ற நூல் வத்திக்கானில் - திருத்தந்தை யின் நூலகத்தில் இடம் பெற்றுள்ளது.

உரோமாபுரியின் மன்னனாக இருந்த கொன்ஸ் ரன்ரைன் என்பவரின் தாயார் எலன், கி.பி 326 செப்டம்பர் 14ல் இயேசுநாதர் அறையப்பட்ட சிலுவையைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து ரோமில் ஒரு தேவாலயம் கட்டி அதில் நிறுவினார். இதற்காக அவருக்கு புனிதை பட்டம் வழங்கப்பட்டு 'புனித எலோன் இராக்கினி அம்மாள்' என்று அழைக்கப்படுகிறார். ✦

தொகுப்பு. மலர்

# ஆளுநர் விருது பெற்ற அன்புமணி

**2001ம் ஆண்டுக்கான வ.கி.மா. ஆளுநர் விருது கடந்த 20.01.2002ல் வழங்கப்பட்டது**

**திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி)**



**1935**ஆம் ஆண்டு மார்ச்மாதம் 6ஆம் திகதி மட்டக்களப்பு ஆரையம்பதியில் பிறந்த இரா. நாகலிங்கம் அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாண காணி, விவசாய கூட்டுறவு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்.

இலங்கை நிர்வாக சேவையின் உயர் அதிகாரியாகப் பல பிரதேசங்களில் கடமையாற்றி சிறந்த ஒரு நிர்வாகியாக விளங்கிய இரா. நாகலிங்கம் அவர்கள் "அன்புமணி" என்ற புனைப் பெயரில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், சமய, கல்வி, கலை, இலக்கியக் கட்டுரைகளையும், வானொலி, மேடை நாடகங்களையும் படைத்துள்ளார்.

1992ஆம் ஆண்டு இந்துசமய, பண்பாட்டுத் திணைக்களத்தினால் "தமிழ்மணி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இரா. நாகலிங்கம் அவர்கள் கிழக்கிலங்கையின் சாதனைகளையும், பெருமைகளையும் ஆவணங்களாக்கி தேசிய இலக்கிய நீரோட்டத்தில் கலக்க வைக்க வேண்டும் என்ற இலக்கில் கிழக்கிலங்கை வரலாறு தொடர்பான தகவல்களைச் சேகரித்து ஆவணப் படுத்தி வருகின்றார்.

சுதந்திரன், வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும், கல்கி; கங்கை, தேனருவி போன்ற சஞ்சிகை களிலும் இவரது சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், வெளி வந்துள்ளன.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக நூல் வெளியீட்டுத் துறையிலும், திறமையுள்ள கலைஞர்களைக் கௌரவித்தும், ஊக்குவித்தும் மட்டக்களப்பின் அரிய நூல்களை மறுபிரசுரம் செய்தும் இலக்கியப் பணியை ஆற்றி வருகின்றார்.

அன்புமணி அவர்களின் 40வருட கலை, இலக்கியப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக 2001 ஆம் ஆண்டிற்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் அந்தக் கொடியகாலம்

சிலுவை மரம் பெறுமதியானது
அந்தச் சினம் கொள்ளா
நேச மனிதனால்.
அவர் பாதங்களை
தாங்கிக் கொண்டதால்
பூமியும் புனிதம் பட்டது.
புதுப்பித்துக் கொள்ளத்
தெரியாத மனிடத்தால்
மாசாகிப் போனது
சிலுவையில் அறையுங்கள்
கொலை செய்யுங்கள்
கோசங்கள் - பாவமே
செய்யாத பரமனுக்கு
நன்றி கெட்ட மனிதர்
இசைத்த புகழாரம்
மனுக்குலத்தை மீட்கவந்த
மாமனிதன், பிதா மகனுக்கு
மாபெரும் மக்கள் கூட்டம்
செய்தகைமாறு.
சிலுவை மரணம் - வேண்டாம்
அன்று செய்த பாவங்களின்
குஞ்சுகள் வளர வேண்டாம்
மனங்களில் பிறக்கின்ற
புன் செயல்களை - சிலுவையேற்றி
ஆணி அறையுங்கள், மீண்டும்
உயர்த் தெழாதபடி,
இதயக் கருவூலத்தை
பலப்படுத்துங்கள் - நல்லவைகள்
அபரிக்கப்பட்டு அழிந்துபோகா
வண்ணம்!

மூதூர் - எஸ் - புருஷோத்மன்

# கவிதை கேளும் ஐயா

- எம். எல். எம் அன்ஸார் -

விலையோ கூடிப் போச்சு
வீழ்ந்தோம் துயரக் கடலில்!
இலையே கையில் காசு!
இதுதான் வாழ்க்கை யாச்சு!
அலையில் பட்ட ஓடம்
ஆடும், அதுபோல் வாழ்வு!
கலையும் மேகம் போலே
கழியும் வாழ்வில் இன்பம்!

பானை வெறுமை யாகி
பசியோ தீயாய்த் தீய்க்கும்!
வானை முட்டுந் தூரம்
வறுமை தினமும் உயரும்!
ஏனோ இந்தத் துயரம்
என்றோ இதுவும் தீரும்!
காணோம் கையில் காசை
காணத் தானே ஆசை

பாலும் பாணும் மீனும்
பார்த்திருக்கக் கூடும்!
வாழும் காலம் தன்னில்
வறுமை என்று மாறும்?
நாளும் விலையே கூடின்
நாடும் செழிக்கா திங்கே!
ஆளும் ஐயா மாரே
அடியேன் கவிகேட்பீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம் வேண்டும்

## இந்த மண்ணில்

காலங்கள் நமக்காகக் காத்திருப்பதில்லை,
பருவங்கள் நமக்காகப் பார்த்திருப்பதில்லை,
உறவுகள் நம்மை எதிர்பார்த்திருப்பதில்லை,
வாழ்க்கை கூட நமக்காக பயணத்தை நிறுத்திவைப் பதில்லை

ஏன் நாம் கூட மற்ற வருக்காக எமது வாழ்க்கையை தடுத்து வைப்பதில்லை, அப்படி செய்யவும் முடியாது!

நமக்காக இந்த மண்ணில் ஒருவர்தான் காத்திரு க்க முடியும், காத்திருக்கிறார்! நமக்காக வாழ்வைத்தர ஒருவர்தான் இந்த மண்ணில் பார்த்திருக்க முடியும், அவர் பார்த்திருக்கிறார்!

அவர் நம்மில் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்திருக்கிறார், அது எப்போ வருமென்று பொறுத்திருக்கிறார். அந்த மாற்றம் எம்மில் வரும்வரை அவர் எம்மில் செயல்படுவதில்லை. தாம் படைத்த சிருஷ்டி என்பதற்காக அவர் எம் வாழ்வில் பலாத்காரமாக நுழைவ தும் இல்லை.

நமது மனமாற்றத்திற்காக, நமது விருப்பத்துக்காக, நமது அழைப்புக்காக, நமது குரலுக்காக அவர் காத்திருக் கிறார். அழைக்கும்போது ஓடோடி வந்து நம்மைக் காக்க, நம்மை வாழச் செய்ய அவர் தயாராயிருக்கிறார்.

என் பெயரை அறிந்திருப்போரை நான் பாதுகாப் பேன், அவர்கள் அழைக்கும்போது நான் பதில் கொடுப்பேன்' என்று சங்கீதம் 91ம் அதிகாரத்தில் 19ம் வசனத்தில் சொல்லப்படுவதுபோல அவரை அறிந்து, அவரை உணர் ந்து, அவரது அருளின் மேன்மையை, வல்லமையை புரிந்து கொண்டவர்களாக நாம் இருப்போமானால் நிச்சயம் அவரது பாதுகாப்பு எம்முடன் குடியிருக்கும்.

வெள்ளம் பள்ளம் நோக்கித்தான் பாயும். இறை வனின் அருளும் அவரில் அருவியாய்ப் புறப்பட்டு, ஆறாக ஓடி, வெள்ளமாகப் பாய்கின்றது. பள்ளத்தில் விழுந்து கிடக்கும் மனிதனை, மனித வாழ்வை அருள் சேர்த்து வளப்படுத்துவதுதான் அதன் பணி.

அவலம் நிறைந்த இந்த உலகத்திலே.. வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்ட இந்த மண்ணிலே... யாரைத்தான் நம்புவது என்ற ஏக்கப் பெருமூச்சுடன் வாழ்நாளைக் கடத்திக் கொண்டிருக்கின்ற நாம்.. நமக்காக ஒரே ஆதாரமாக அமைகின்ற இறைவனைப் பற்றிப் பிடித்தாலன்றி நிம்மதி காண முடியாது, சமாதானம் காண முடியாது!

எந்திரமாகிவிட்டது வாழ்வு! பம்பரமாகிவிட்டது நமது வேகம். நாளோடும் பொழுதோடும் நமது தேவைகளும் அதிகரிக்கின்றனவேயொழிய குறைவதாய் இல்லை. பரக்கப் பரக்க உழைக்கின்றோம். சொத்து சேர்க்க முயல்கின்றோம். கடைசியில் எஞ்சுவதோ... இவ்வளவுதானா, எல்லாமே இவ்வளவுக்கும்தானா, என்ற கேள்விகளே!

நமது ஆன்மா ... நமது இயக்கம் .. படரும் கொடிகளேயன்றி.. நிமிர்ந்திருக்கக் கூடிய மரங்கள் அல்ல.. அவை ஆதார த்திற்காக இறைவனைச் சேர்ந் திருக்க வேண்டும். அவரைச் சுற்றிப் படர்ந்த கொடிகளாக இருக்க வேண்டும். அப் போதுதான் அவற்றிற்கும் உறுதி பிறக்கும். நம்மையும் அவை உறுதியாக்கும். இல்லையேல் நலிந்த எமது உடலும், அலைபாயும் எமது மனமும் எமது பயணத்தை இடை நடுவில் திசை திருப்பி விடும்.

விருந்தைச் சாப்பிட்டு ருசியான சமையல் என்கி றோம். சாப்பாடு என்கிறோம்.. அந்த ருசி சமைக்கப்பட்ட பொருளால் மட்டுமா வருகிறது? உண்மையில் அதில் சேர்க்கப்படும் ஏனைய திரவியங்களினால் அல்லவா ருசி சேருகிறது. இறைவனின் அருளும் .. அவரின் பிரசன்னமும் இதுபோலதான் நம் வாழ்வுக்கே சுவை ஊட்டுகின்றன. பலம் ஊட்டுகின்றன. கருத்தைக் கொடுக்கின்றன.

ஆளைப்பார்த்து, ஆடை பார்த்து அருளைத் தருபவரல்ல இறைவன், அது வியாபாரம் என்றாகிவிடும். உள்ளத்தைப் பார்த்து, அதில் ஓடும் உணர்வுகளைப் பார்த்து அதன் ஏக்கங்களைப் பார்த்து வாழ்க்கை வளமாக் குகிறவர்தான் இறைவன். தறிகெட்டுப் பாய்கின்ற குதிரை யாகப் போய்க்கொண்டிருக்கின்ற எமது வாழ்வைக் கடி வாளம் போட்டு நிறுத்த வேண்டும். நாம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம் என்ற கேள்வி நம் நெஞ்சில் நாளும் எழும்பி நம்மைச் சிந்திக்கப்பண்ண வேண்டும். வேகத்தோடு போவதைவிட விவேகத்தோடு போவதுதான் வாழ்வுக்கு நன்மை தரும்.

தான் படைத்த படைப்பை படைத்த கையோடு கை கழுவி விடுகிறவரல்ல இறைவன். கைவிட்டவருமல்ல நம் இறைவன் நமக்காகப் பல இழப்புக்களை ஏற்றுக் கொண்டவர் அவர். தன் சொந்த மகனையே வேதனைக் குள்ளாக்கியவர்.. அவமானங்களுக்கு ஆளாகும்படி விட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தவர். சாவை ருசி பார்க்குமளவுக்குப்பார்த்து நின்றவர். இவை அனைத்தையும் தனக்காகவா அவர் செய்தார்? நமக்காகவல்லவா அதைச் செய்தார்! நாம் வாழ வேண்டும் என்பதற்காகவல்லவா அதைத் தாங்கிக் கொண்டார். நாம் விடுதலை காணவேண்டும் என்ற ஆசையினாலல்லவா அத்தனை சிரமங்களையும் தன் மகன் அனுபவிக்கச் செய்தார்.

இருந்தும் நமது பதில் என்னவாக இருந்தது? இருக்கிறது? இருக்கப்போகிறது?

இந்த மண்ணில் எமது சொந்தத்தில் வாழ முற்பட்டு, இருப்பதையும் இழந்து நாதியற்று அனாதரவாக நிற்கப்போகின்றோமா? சுடலை ஞானம் வரும்வரை காத் திருக்கப் போகின்றோமபா? இல்லையேல் இறைவனைக் கூவி அழைக்கப்போகின்றோமா?

அழைத்தால் வருவேன். அடைக்கலம் வேண்டு வோருக்கு வாழ்வைத் தருவேன் என்கின்ற இறைவன் நம்மை நம் மன மாற்றத்தை நம் நாளாந்த வாழ்வில் உரிய மாற்றத்தை எதிர்பார்த்து நிற்கின்றார்.. முடிவெடுப்போம் குரல் கொடுப் போம். ✦

❑ ஆனந்தா A.G. இராஜேந்திரம்

# தேவாலயத்திரை கிழிந்தது ஏன்?

பாவக்கறையிலிருந்து நம்மை மீட்க மனுவுரு வெடுத்த மாபரன் இயேசு மரித்தவேளை பூமியெங்கும் அந்த காரம் உண்டானது. சோகம் தாங்காது சூரியன் அஸ்தமித்தான். கல்மலைகள், குன்றுகள் வெடித்தன. இறந்தோர் உயிர் பெற்றனர். தேவாலயத்தின் திரை நடுவில் கிழிந்தது. இப்படி யான நிகழ்ச்சிகள் நடந்தன. இருப்பினும் தேவாலயத் திரை கிழிந்ததன் மர்மம்தான் என்னவோ?

பலகாலம் கஷ்டப்பட்டுப் பிரமாண்டமாகக் கட்டி முடிக்கப்பட்ட ஜெருசலேம் தேவாலயத்தை இடித்து மூன்று நாட்களில் கட்டிமுடிப்பேன் என்று இயேசு ஏற்கனவே யூதர்களுக்குச் சொல்லியிருந்தார். இதனால் அவரை ஏளனம் செய்தார்கள். ஜெருசலேம் தெரிந்தெடுக்கப்பட்ட இனத்தின் அடையாளமாக விளங்கியது. இங்கேதான் அடிக்கடி மீட்பின் நற்செய்தியைப் போதித்து வந்தார். ஆனால் ஜெருசலேமோ இதை ஏற்க மறுத்தது. இதனால் அது தண்டனைக்குள்ளானது. ஜெருசலேமுக்கு நிகழவிருப்பதை முன்கூட்டியே அறிவித்தார். 'ஜெருசலேமே, இறைவாக்கினர்களைக் கொன்று உன்னிடம் அனுப்பப்பட்டோரையும் கல்லால் எறியும் ஜெசருலேமே.......' இவ்வாறு மனம் நொந்து அழுதார்.

இஸ்ராயல் மக்கள் உலகார்ந்த அரசர் ஒருவரையே எதிர்பார்த்திருந்தனர். இதனால் மனுவுரு வெடுத்த மீட்பரை உதாசீனம் செய்தனர். கழுதைமீது ஊர்வலம் வரும்போது ஓசானா பாடி வந்த சீடர்களை மௌனமாக்க யூதத்தலைவர்கள் முற்பட்டனர். இதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை நினை த்துக் கண்ணீர் சிந்தினார். தொடர்ந்து மீண்டும் ஜெருசலே முக்கு நிகழும் அழிவை முன்னறிவித்தார்.

இயேசு மனமுவந்து தம்மை நமக்காகப் பலியாக் கினார். இதனால் மீட்புப்பணியை பிரமாணிக்கத்துடன் நிறை வேற்றி எமக்கு முடிவில்லாப் பெரும்பேற்றை வென்றெ டுத்தார். கல்வாரியில் இயேசு மரித்தபோது சிலர் செபிக்கத் தொடங்கினர். சிலர் பாவங்களை நினைத்து மனம் வருந்தி மார்பில் அறைந்து கொண்டனர், ஆனால் 'நிகழ்ந்ததைக் கண்ட நூற்றுவர்தலைவன் 'உள்ளபடியே இவர் நீதிமான்' என்று சொல்லி, கடவுளை மகிமைப்படுத்தினான்' (லூக் 23:47)

கல்வாரியிலிருந்து திரும்பிய விசுவாசிகள் புதிய ஜெருசலேமைக் கண்டனர். இறை அரசு அனைவருக்கும் திறக்கப்பட்டது. புனிதம் வாய்ந்த பழைய ஜெருசலேமின் இரத்தப் பலி, கிறிஸ்துவில் புது நோக்கைப் பெற்றது. மீட்பின் நற்செய்தியும்; கல்வாரித் திருப்பலியும் முழு உலகத்தினதும் விடுதலைக்கு அடிப்படையாக அமைகின்றன. இயேசு மனித இனம் முழுவதன் மீட்பர் என்பதைக் காட்டவே சுவிசேஷக லூக்காஸ் பழைய உடன்படிக்கை கிறிஸ்துவில் நிறைவாக்கம் பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றார். 'ஆலயத்தின் திரை நடுவில் கிழ்ந்தது' (லூக் 23: 45) என்பதன் பொருள் இதுவே. ✦

அ. பி. றஞ்சன் குரூஸ்
புதுக்குடியிருப்பு
வாழைச்சேனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20ம் பாடம்

### கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாப்போம்

**பல்வேறுபட்ட கலாசாரங்கள்**

❖ இலங்கை பல்வேறு கலாசாரங்களைக் கொண்டதோர் நாடாகும்.

❖ நமது நாட்டில் கலாசார அம்சங்களாகப் பல்வேறு சமய ஆசார முறைகளும், சமுதாய விதிமுறைகளும், பல்வேறுபட்ட கட்டிடங்கள், உடைகள், விழாக்கள் என்பனவும் காணப்படுகின்றன.

❖ பல்வேறு விதமான திறன்களாக வனைதல், வரைதல், இசைத்தல், ஆடுதல், இலக்கியம் ஆகியன உள்ளன.

❖ மறையம்சங்களாகப் பல்வேறுபட்ட வழிபாட்டு முறைகள், சமய விழாக்கள், சமய நூல்கள், காணிக்கைகள், விழாக்களின் பாரம் பரிய வழக்கங்கள், சமய சட்ட திட்டங்கள் ஆகியன காணப்படுகின்றன.

❖ இந்நாட்டில் வாழும் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மக்களின் விசேட தன்மைகளை அறிந்துணர்ந்து கொண்டால் அவர்களோடு ஒன்றிணைந்து வாழ இலகுவாயிருக்கும். நாட்டின் சமாதானத்தையும் பாதுகாக்க முடியும்.

❖ இதன் மூலம் நம்நாட்டில் வாழும் பலதரப்பட்ட மக்கள் இனத்திற்குக் கிறிஸ்துவின் மேன்மையை விளங்கப் படுத்தப் போதிய அறிவு கிடைக்கும், மறைவிதி முறைகளினூடாக மனித வாழ்வை வளப்படுத்துவது எமது கடமை.


❖ இறைமக்களின் வாழ்வுக்குக் கலையும், கலாச்சாரமும் மிக முக்கியமானவை இதன் வழியாகப் பலதரப்பட்ட மனிதரது எழுத்தாக்கங்கள், சமுதாயக்கண்ணோட்டங்கள் என்பன கலாசார முறைகளில் தங்கியுள்ளன.

❖ எனவே மக்களது எதிர்பார்ப்புகள், வாழ்க்கை முறைகளை நாமறிதல் அவசியமாகும். இதன் மூலம் மறைபரப்பு இலகுவாகும்

❖ கலாசாரப் பண்புகளற்ற இடத்தில் மனிதத் தன்மையற்று விடும்.

❖ கலாசாரங்களின் மூலம் ஏனைய நாடுகளுக்கும் நற்செய்தியை வெளியிட வழிபிறக்கும், பலதரப்பட்ட மக்களுடன் இணைந்து சமய ஒன்று கூடல்களை நடத்துவது கிறிஸ்தவரின் கடமையாகும்.

# மாணவர் பக்கம்



க.பொ.த. (சாதாரணம்)
– சுத்தோலிக்கம் –
* மெற்றில்டா

**கலாசாரமும் மனித உரிமையும்**

❖ கலாசாரமென்பது மனிதனின் அனுபவ மூலம் உருவாகிறது. ஏனெனில், மனிதனின் நல்வாழ்வு கலாசாரத்தையடிப்படையாகக் கொண்டேயமைகிறது.

❖ கலாசாரப் பண்பாடுகள் வீழ்ச்சியுறும்போது மனிதத்தன்மையும் வீழ்ச்சியடையும். அதன் மதிப்பு முன்னேற்றத்தையடையும்போது மனிதத்தன்மையும் வளர்ச்சியடையும்

தேசிய கலாசார முக்கியத்துவத்தை வளப்படுத்தவே கிறிஸ்துவும் தம் மக்களுக்கு அழைப்பு விடுகிறார். அதாவது:

1. ஏழைகளுக்கு உதவுங்கள். சொத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். மனிதன் உயிர்வாழ்வது அப்பத்தினால் மாத்திரமன்று (லூக்கா 4:4)
2. சமய விதிகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். விக்கிரக ஆராதனை செய்யாதீர்கள். இறைவனுக்கு மேலான ஆராதனை செலுத்துங்கள்.
3. நன்மைத்தனத்தின் பொருட்டு மனிதரின் மனதை வெல்லுங்கள். (லூக்கா 5:10)
4. சமூகத்தினாலொதுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளித்து முன்னேற்றப்பாதையில் அவர்கள் வழிநடத்துங்கள். (லூக்கா 5: 30 –32)
5. மனித உரிமைகளை முன்னேற்றும் புதிய விதிமுறைகளை இளம் சந்ததியினருக்கு அர்ப்பணித்து, மனித உரிமைகளை வெல்லுங்கள் (லூக்கா 5: 16 – 39)
6. வெளிவேடம் காட்டாது. நிதமும் நன்மையே செய்யுங்கள். வெளிச்சடங்கு முறைகளைவிட மனிதன் மேலானவன். (லூக்கா 6: 6 –11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நாம் மனிதனை முன்னேற்றும் கலாசாரப் பண்புகட்கு முன்னுரிமையளிக்க வேண்டுமென்பதைத் திருவிவிலியம் கூறுகிறது

**மனித உரிமையை வெளிப்படுத்தும் கலாசார முக்கித்துவம்**

- ✧ மனிதத்தன்மையை மேலாக மதித்தல்.
- ✧ கிராமமக்களின் பண்பாகிய ஒற்றுமை வாழ்வு
- ✧ பெண்களுக்கு மதிப்பளித்தல்
- ✧ விருந்தினரை உபசரித்தல்
- ✧ பொதுவான இடையூறுகளின்போது சமய வழிபாடுகளிலீடு படுதல்
- ✧ சமாதானத்தையேற்படுத்துதல்
- ✧ அன்பு, கருணை. அமைதி, ஒற்றுமை பேணுதல்
- ✧ பல்வேறுபட்ட மறைகளுக்கு மதிப்பளித்தல்
- ✧ சகோதர பாசத்துடன் வாழ்தல்
- ✧ அனைவர்க்கும் மதிப்பளித்தல்

மேற்கூறப்பட்ட கலாசார மதிப்பீடுகளைக் கொண்டு நம் வாழ்வை வளப்படுத்திக் கொள்வோமானால், மனிதத்துவம் மதிக்கப்படும் எனப்தற்குச் சந்தேகமேயில்லை.

**இன்றைய நிலை**

- ✧ மனிதத் தன்மை வீழ்ச்சியடைந்துள்ளது.
- ✧ பணம், பதவி, பொருள், புகழ் போன்றவற்றுக்கு மனிதத் தன்மை அடிமைப்பட்டுள்ளது.
- ✧ இச்சந்தர்ப்பத்திலே, கலாசார முக்கியத்துவத்தினூடாகத் தீயசெயல்களை அடிமைப்படுத்தி மனித உரிமையை மேம் படுத்துவதே கிரஸ்தவர்களாகிய எம் கடமை.
- ✧ பிழையான வழிகளிலிருந்து மக்களை மீட்க: பொருளாதார, அரசியல் காரணிகள் மூலம் தேசிய, சர்வதேச மட்டங்களில் தீர்மானித்துச் செயற்படுத்துவது எம் கடமை.
- ✧ குலம், பால், சாதி, மத, பதவிவேறுபாடுகளை எழுப்பக் கூடாது.

**கிறிஸ்தவ மறையில் பண்புகளைப் பாதுகாத்தல்**

- ✧ ஒவ்வொருமதமும் ஒழுக்கவிழுமியங்களில் வேறு பட்டுள்ளது.
- ✧ கிறிஸ்தவராகிய நாம் கிறிஸ்தவ மத ஒன்றிப்பைப் பாதுகாக்க முன்வருகையில் எம் மதத்தின் விசேட செய்திகளையும் உயர்நிலையையும் நம்மால் நிரூபிக்க முடியும்.
- ✧ நம்நாட்டுப் பண்பாடுகள், கலாசார முறைகளைக் கிறிஸ்தவ மதத்திற் கேற்றதாக மாற்றிக்கொள்ளலாம். பொதுவாக தேசிய மதிப்பீடுகள் வழியாகக் கிறிஸ்தவச் சிறப்பைக் காட்டுவது தகுதியானதாகும்.

**கிறிஸ்தவ சமயப்பண்பை வெளிப்படுத்தும் முறைகள்**

- ✧ ஒரே இறைவனை விசுவசித்தல்.
- ✧ பத்துக் கற்பனைகளுக்கும் புதிய அன்புக் கட்டளைகள் இரண்டுக்கும் கீழ்ப்படிதல்.
- ✧ இறைவார்த்தைக்குச் சான்று பகர்வதுடன், இறைசித்தத்தை நிறைவேற்றுதல்.
- ✧ கிறிஸ்துவின் புதிய போதனையின்படி அவர் உண்மையாகவே எம்மோடிருக்கிறாரென விசுவசித்தல்.
- ✧ பரிசுத்த திருச்சபையின் அருட்சாதனங்கள் மூலமும் வழிபாடுகள் மூலமும், செபம், தியானம் வழியாகவும் திருச்சபையின் படிப்பினைகட்குக் கீழ்ப்படிதல்.

## திருச்சபை

- ✧ பரிசுத்த திருச்சபை பல் வேறு கலாசாரத்தினூடாகக் கிறிஸ்துவின் செய்தியை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.
- ✧ மீட்பின் செய்திக்கும் மனித கலாசாரத்திற்குமிடையே நெருங்கிய தொடர்புகளுண்டு.
- ✧ பற்பல சூழல்களிலேயுள்ள கலாசாரங்களின் வழியாக நவீன முறையில் நற்செய்தியை அர்த்தமுள்ளதாக்கவும் கலாசாரத்தைச் சிறப்பிக்கவும், நற்செய்தியின் ஒருமைப் பாட்டைப் பாதுகாக்கவும் திருச்சபை நடவடிக்கையெடுத்தது.
- ✧ திருச்சபை உலகெங்கும் பரவி, மறைபரப்புச் சேவை செய்யக் கடமைப்பட்டுள்ளது. ஆனால் அது ஒரு வம்சத்துக்கோ சாதியினருக்கோ, வாழ்க்கை முறைக்கோ, விசேடபண்பாட்டு முறைகளுக்கோ அடங்கியதல்ல.
- ✧ திருச்சபையின் செயல்கள் இயற்கையானவை. பல கலாசாரங்களுக்குமேற்ப. தன்னையமைத்துக் கொள்ளும் திறமை மிக்கது.
- ✧ மறைபரப்புப்பணி, போதனை, பொதுவழிபாடு, கிறிஸ்தவ சாட்சியம் போன்றவைகள் மூலமாகத் திருச்சபை நாம் வாழ வழி செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 21

### இலங்கையில் கிறிஸ்தவ ஒன்றியம் (இலங்கையில் திருச்சபை)

### உலகளாவிய கத்தோலிக்கத் திருச்சபை

- ✧ இயேசு சகல மனிதரின் மீட்புக்காக உலகுக்கு வந்தார் (லூக்கா 4: 18 -19)
- ✧ தமது மீட்புப்பணியை முன்கொண்டுசெல்லும் கடமையை அப்போஸ்தலர்களிடம் ஒப்படைத்தார். (மாற்கு 16: 15 -16)
- ✧ இயேசு ஏற்படுத்திய திருச்சபை முழு உலகுக்கும் பொதுவானது. சகலமனிதர்க்கும் மீட்பு கிடைப்பதே இறைசித்தம்.
- ✧ திருச்சபைக்கும் மனித சமுதாயத்திற்குமிடையில் ஆன் மீகத் தொடர்புண்டு
- ✧ மனித சமுதாயத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், மனிதனை இறைவனிடம் கொண்டு செல்வதற்கும் பாடுபடுகிறது திருச்சபை
- ✧ பல்வேறு நாடுகளின் மக்களது கலாசார மதிப்பீடுகளை யேற்று அவற்றினூடாக நற்செய்தியைப் பரப்புகிறது திருச்சபை (இன்றைய உலகில் திருச்சபை - 58)
- ✧ திருச்சபை நற்செய்தியைத் தேசியமயமாக்கிக் கொடுக்க இளைஞரையும், முதியோரையும் ஆயத்தஞ்செய்கிறது.
- ✧ பொது ஆராதனைகளைத் தேசிய கலாசாரமுறைகளில் கருத்துள்ளதாக அமையப் பொதுநிலையினரின் ஒத்து ழைப்பைப் பெறுகிறது
- ✧ பங்கு மக்களுக்குப் பயிற்சியளிக்கிறது
- ✧ வழிதவறிச் செல்லாது, கிறிஸ்தவப் பண்பாடுகளைப் பாதுகாத்துப் பொதுவான முறையில் தேசிய மயமாக்கி முன் கொண்டு செல்ல வேண்டும்.

எமது இலங்கைத் திருச்சபை வரலாற்றை நோக்குகையில் பலர் எமது கலாசாரத்திற்குப் பொருத்தமானமுறையில் பணி செய்துள்ளனர். அவர்களில் சிலர் வருமாறு:

#### 1. முத்திப் பேறுபெற்ற யோசேப் வாஸ் அடிகள்

இந்தியாவின் கோவை நகரிலிருந்து வந்து எமது நாட்டில் துன்புறுத்தப்பட்டவர்களுக்குப் போதனை செய்ய நம் மொழிகளைக் கற்று, நமது வாழ்க்கையை வாழ்ந்து கால்நடையாகச் சென்று நற்செய்தியைப் பரப்பினார்.

#### 2. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகள்

இந்தியாவிலிருந்து வந்து எம்மொழிகளைக்கற்று நூல்களை வெளியிட்டு, மக்களுக்குத் திருமறையைக் கொண்டு செல்ல உதவியுள்ளார். வேதகாவியம், தேவவே தபுராணம், தேவநீதி போன்ற நூல்களையெழுதினார். இவற்றைவிடச் செபங்கள் பாடல்களையும் எமக்குத் தந்துள்ளார்.

#### 3. அதிவந்தனைக்குரிய எட்மண்ட் பீரிஸ் ஆயர்

இவர் 'முத்தூர் ஒளிவிளக்' கெனப்புகழ்பெற்றவர். சிங்கள இலக்கியக் கலையில் கௌரவப் பட்டதாரிப் பட்டத்தையும் பெற்றவர். திருமறையைச் சிங்களத்தில் பிரச்சாரம் செய்வதில் மிக ஆர்வமுடன் செயற்பட்டவர். பாடல்களையும் பரப்பினார்

#### 4. வண. மார்சலின் ஜயக்கொடி அடிகள்.

கிறிஸ்தவ சங்கீதத்திலும், பாடல்கள் இயற்று வதிலும் சேவையாற்றினார். திருப்பாடல்களைத் தேசிய மொழியில் எழுதினார். கீர்த்தனங்களையும், பாடல்களையும் தேசிய இசையுடன் பாடினார். எமது நாட்டு இயற்கை யினூடாகப் பாடல்களை இயற்றினார். இலக்கியக் கலையை ஆவலுடன் வளர்த்தார்

#### 5. அதிவந்தனைக்குரிய ஒஸ்வோல்ட் கோமஸ் ஆயர்

கிறிஸ்தவ மறைக்கல்வி நூலான 'பெரிய குறிப்பிடத்தை மிகவும் எளிமையான முறையில் எழுதினார். சிறுவர் வேதாகமம், இளைஞர் வேதாகமம் ஆகியவற்றையும் சிங்களத்தில் எழுதினார். இவை அவரது இலக்கிய இலக்கண அறிவைக் காட்டுகின்றன.

#### 6. வண. டொன் பீற்றர் அடிகள்

கல்விமான், இலக்கிய அறிஞர். வரலாற்றறிஞர் ஆகிய இவர் கிறிஸ்தவ இலக்கியத்தையும், கலா சாரத்தையும் வளர்க்கப் பெருஞ்சேவை புரிந்தார். தினசரிப் பத்திரிக்கைகள், கத்தோலிக்கப் பத்திரிகைகளுக்கு நூற்றுக் கணக்காக கடிதங்களையெழுதியுள்ளார். பாமர மக்களும் சமய அறிவைப் பெறுவதற்காகச் சிறு புத்தகங்களை யெழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

## சுதந்திரமும் இலக்கியமும்

உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளை எடுத்து நோக்கினால், போராட்ட நோக்கங்கள், அவற்றின் வடிவங்கள் என்பன வேறுபட்டுக் காணப் பட்டாலும், இப்போராட்டங்களில் இலக்கியங்களின் பங்களிப்பு என்றும் சோடைபோனதில்லை

நாடுகளின் சுதந்திரப் போராட்டம், பெண்களின் விடுதலைப்போராட்டம், தொழிலாளர் உரிமைப் போராட்டம், இன விடுதலைப்போராட்டம், பொருளாதார எழுச்சிப்போராட்டம் என்றவாறு போராட்டங்களின் நோக்கங்கள் வேறுபட்டுக்காணப்படுகின்றன.

அதே வேளையில் அவற்றின் வடிவங்கள் ஆயுதப்போராட்டம், அகிம்சைப்போராட்டம் என்று இருவகைகளில் காணப்படுகின்றன.

எது எவ்வாறு இருப்பினும், இப்போராட்டங் களில் இலக்கியத்தின், எழுத்துலகின் அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்பை எவரும் இலகுவில் மறந்து விட முடியாது.

இவற்றுக்கு உதாரணம் தேடி நாம் வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. நமது சுப்பிர மணியபாரதியார் எமக்கு நல்ல உதாரணம். அவரின் 'சுதேச மித்திரன்' பணிகள், தேசிய கீதங்கள் என்பன இலகு தமிழில் எமக்கு கிடைக்கக்கூடிய சுதந்திரப் போராட்ட இலக் கியங்கள் ஆகும்.

'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்றுமடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?

என்று 'சுதந்திர தாகம்' என்ற பாடல் வரிகளில் 'சுதந்திர வேட்கையை' மிகவும் அழகாகப் பாடுகின்றார். அதில் அடிமையின் தளைகள் தெரியா மலே, அதனை விளங்கிக் கொள்ளாமலே 'மோகம்' பிறநாட்டு மோகத் தில் திளைத்திருப்பவர்களையும்பாரதி சாட்டையால் விளாசுகின்றார்.

அவர் தனது 'விடுதலை என்னும் பாடலிலே

பறைய ருக்கும் இங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை!
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை!

என்று கூறும்போது சாதி இனவேறுபாடுகளை அவர் ஆதரிக்கின்றாரோ என்ற எண்ணம் எழுவது இயல்பு. ஆனால் அடுத்த பந்தியில் அச்சந்தேகத்தைப் போக்கி விடுகின்றார்.

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே,

இவ்வாறு இலக்கியத்தின் மூலம் சுதந்திர வேட்கையை ஊட்டிய பாரதி, வறுமையில் வாடினார் சிறை சென்றார் அதாவது வாழ்ந்துகாட்டினார்.

ஆனால் இன்றைய உலகநடப்புகளை எடுத்துக் கொண்டால் 'சுதந்திரவேட்கையை தூண்டும் இலக்கியங்கள் எவ்வளவுதூரம் வெளிவருகின்றன எனபது கேள்விக்குறியே! ஏனென்றால் கருத்துச் சுதந்திரங்கள் கருவறையில் இருந்து வெளிவருமுன்பே கல்லறைக்குள் புதைக்கப்பட்டுள்ளன. இதன் வடிவம் தான் சில புகழ் பெற்ற எழுத்தாளர்களின் மறைவும், மறைவிட வாழ்க்கையும்.

*'என்று தணியும் இந்த சுதந்திரத் தாகம்?......'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தின் அழைப்பு

❋ அ.ச. பாய்வா

உலகின்
அதி உயர்ந்த காவியத்தின்
இறுதி வரிகளைப் பூமி
எழுதத் தொடங்கியது!

சுழிபோட்டு
சூக்குமத்தின் வழிகோலி
தளிர்மேனிக் காலமகள்
தன்
சுயரூபம் காட்டிநின்றாள்!

அன்றோர் ஞாயிறு
தன் கிரண நகங்களால்
முகங்கீறி
ரத்தக்குளியலிட்டு
வானத்தில் முகந்துடைத்து
ஞாயிறும் வந்தது!

எங்கும்
அமைதியின் கோலோச்சு
விதியின் அஸ்தமனச் சோம்பல்
ஆகடியம் தன்
விளிம்புகளைத் தொட்டுக்
கூர்பார்த்துக் கொண்டது!

கண்ணீர்!
அன்பனே உன்
பலியை யாசித்து நிற்கும்
பூமியைப் பார்த்து விடும்
இறுதிக் கண்ணீரோ இது!

உன் தீர்க்கதரிசனங்களே
உன்னைச் சிறைப்படுத்தும்!

உன் தீர்க்கதரி 'சனங்களே'
உன்னைத் தீர்ப்பிடும்!

ஓசான்னா...........
இவை இனிய வரிகளல்ல
உன் இறுதிவரிகளைக்
காற்றில் சுமந்துவரும்
முதல்வரி

அது
வாழ்த்தொலியல்ல
உன்னை
வீழ்த்துமொலி!
உன்னைச்
சிரசில்வைத்துக்
கொண்டாடியவர்களின்
துரோகமொழி!


ஒலிவ்
கிளைகளுக்குள்
ஒளிந்திருந்தது
உண்மையல்ல – உன்மத்தம்!

ஓசான்னா....!
தருணமழைக்கிறது
ஓசான்னா.....
உன்னை
மரணமழைக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



## உலக மதங்களின் செபக்கூட்டம்

1986ம் ஆண்டு அக்டோபர் 27ம் திகதி அசிசியில் நடத்தப்பட்ட உலக மதங்களின் அமைதி ஜெப அனுபவம் கடந்த 24ம் திகதியன்று அதே இடத்தில் மீண்டும் நடைபெற்றது. இதுபற்றி திருத்தந்தை குறிப்பிடுகையில் பல் மதங்களின் ஜெனவரி 24 செபவழிபாடு மத இணக்கத்தை மனதில் கொண்ட தல்லமாறாக அமைதிக்கான ஒன்றிணைந்த செபத்தை நோக்கமாகக் கொண்டது என்றார் திருத்தந்தை. ஒவ்வொரு மதமும் அவரவர்க்குரிய தனி இடத்தை அவரவரின் விசுவாசத்துக்கும் மொழிக்கும் கலாசாரத்துக்கும் இயன்ற வகையில் செபீயர் என்கிறார். உண்மையான நிலைத்த அமைதிக்கு அடிப்படையாக இருக்கும் மனிதர்களை மதித்தலை ஊக்குவிக்க அனைத்து மதங்களும் ஒன்றிணைந்து உழைக்க முடியும் எனவும் கூறினார் அவர். மதத்தின் பெயரால் எவ்வித வன்முறைகளும் இடம் பெறக்கூடா தென்பதை உறுதிசெய்ய வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார் திருத்தந்தை.

## சிறுபான்மையினர் தொகுதி முறை இரத்து!

பாக்கிஸ்தானில் சிறுபான்மை மதத்தினரை ஓரம்கட்டும் தனிப்பட்ட தேர்தல் தொகுதி அமைக்கும் முறையை இரத்து செய்யும் அரசின் தீர்மானத்தை வரவேற்றுள்ளனர், அந்நாட்டுக் கிறிஸ்தவ மற்றும் சிறுபான்மை மதத்தவர், அரசின் இத்தீர்மானம் பாக்கிஸ்தானில் ஜனநாயகத்தை மீண்டும் வலுப்படுத்துவதாக இருக்குமென்று பாக்கிஸ்தான் கத்தோலிக்க ஆயர் பேரவையின் நீதி, மற்றும் அமைதிக்கான குழுத்தலைவர் பேராயர் லோறன்ஸ் சல்தான்சா கூறினார். பாக்கிஸ்தானில் அமுலிலிருந்த சிறுபான்மையினருக்கான தனிப்பட்ட தேர்தல் தொகுதி அமைக்கும்முறையை எதிர்த்து கிறீஸ்தவர்கள் அனேக போராட்டங்களைக் கடந்த காலங்களில் நடத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பாக்கிஸ்தானின் 14 கோடி மக்கள் தொகையில் 97 வீதத்தினர் இஸ்லாமியர், 1. 6 வீதத்தினர் கிறிஸ்தவர்கள்.

## கருவை அழிக்காதீர்கள்

ஜெர்மனியில் மருத்துவ ஆய்வுகளுக்காக முதிராத கருச்சிசுக்கள் இறக்குமதி செய்யப்படுவது குறித்து விவாதங்கள் இடம் பெற்றுவரும் இவ்வேளை மனித உயிர் கருவான நேரம் முதல் காக்கப்படுவதற்குச் சரியான தீர்மானங்களை எடுக்குமாறு ஜெர்மன் கிறீஸ்தவத் தலைவர்கள் சட்டசபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தனர். ஜெர்மன் கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் போல் எட்மனும் கிறீஸ்தவ சபைகளின் தலைவர் பாஸ்ரர் மேக்லட் அவர்களும் சட்டசபை உறுப்பினர் களுக்கு அனுப்பிய கடிதத்தில் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டது. முதிர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அடையாத கருவுக்கும் வாழ்வதற்கான உரிமை இருக்கின்றது என்பதால் அது தாயின் வயிற்றில் கருவான தினம் முதல் எந்த வரையறையும் இன்றி அதற்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று அக்கடிதம் வலியுறுத்தி உள்ளது.

**ரஷ்ய அதிபர் விருப்பம்**

ரஷ்யாவுக்கு திருத்தந்தையை வரவேற்பதற்கான விருப்பத்தை ரஷ்ய அதிபர் விளாடிமின்புட்டின் வெளியிட்டுள்ளது ஒரு விவேகமான முடிவாகுமென்றார், ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் பிதாப்பிதா 2ம் அலெக்ஸி. கத்தோலிக்க திருச்சபைக்கும், ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் திருச்சபைக்குமிடையே முழு உறவு உருவாக்கப்பட்ட பின்னரே திருத்தந்தையின் திருப்பயணம் பயனுள்ளதாக அமையுமென அரசுத் தலைவர் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டினார் ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் பிதாப்பிதா. இரு கிறீஸ்தவ சபைகளுக்குமிடையிலான இணக்க வாழ்வு முயற்சிகளின் ஒரு பகுதியாக கடந்த மாதம் 24ம் திகதி வியாழனன்று இத்தாலியின் செபக் கூட்டத்தில் ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் திருச்சபைகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

**அருள் தந்தை அல்போன்சோ டெல் மார்மொல், யே.ச.**

# இறைபதம் அடைந்தார்



கடந்த 56 ஆண்டுகளாக இலங்கையில் வேதபோதகப் பணியாற்றிய அருள்தந்தை டெல்மார்மொல் அவர்கள் இம்மாதம் (பெப்ரவரி) 12ம் திகதி காலமானார். 1922ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் திகதி மெக்சிகோ நாட்டில் திரு. அல்போன்சோ A. டெல்மார்மொல்; திருமதி கிளோறாலுஸ் டெல்வலே தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த இவர் தமது 17வது வயதில் இயேசு சபையில் இணைந்து கொண்டார். தமது பணிக் காலத்தில் பெரும்பகுதியை திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் செலவிட்ட இவர், புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலம் குறிப்பிடத்தக்கது. குதூகலம் பொங்கும் மனிதராகக் குழந்தைச் சிரிப்போடு வலம்வந்த அருள்தந்தையவர்கள் நற்செய்திப் பணிக்காக தாம் பிறந்த நாட்டை, உறவுகளைத் துறந்து இம்மண்ணுக்கு வந்து, இறுதிவரை இங்கேயே வாழ்ந்து இன்று இந்த மண்ணோடு ஒன்றாகிப்போனார். அவருக்கு காலஞ்சென்ற பிரான்சிஸ் அல்போன்சோ என்ற சகோதரரும், அருள்சகோரி ஹோற்றேசியாறீற்றா என்ற சகோதரியும் உள்ளனர்.

இவரது இறுதிச்சடங்கு ஆராதனைகள் மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் பெப்ரவரி 14ம் திகதி மாலை 3.00 மணியளவில் நடைபெற்று ஆலையடிச்சோலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது . அருள்தந்தை டெல் மார்மொல் அவர்கள் நித்திய வாழ்வில் இளைப்பாற மனறாடுவோம்.

# முப்பெரும் விழாக் கண்ட

## ----------முன்னாள் யாழ் ஆயர்



யாழ் மறைமாவட்டத்தின் ஆயராகவிருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ள பேரருள் தந்தை **B. தியாகுப்பிள்ளை** அவர்கள் தமது பிறப்பின் 85வது ஆண்டையும் குருத்துவத்தின் 60வது ஆண்டையும், ஆயரானதின் 35வது ஆண்டையும் ஒன்றாக நிறைவு செய்துள்ளார்.

ஆயரவர்கள் திருகோணமலை ~ மட்டக்களப்பு மறைமாவட்டத்திலேயே ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு இம் மறைமாவட்டத்தின் துணை ஆயராகவும் பணியாற்றியவர். அக்காலப் பகுதியில் "தொண்டன்" சஞ்சிகை உருவாகக் காரணமாய் இருந்ததோடு, அதன் ஆசிரியராகவும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது ஆயரவர்களுக்கு திருகோணமலை ~ மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சார்பில் தொண்டன் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆயரவர்கள் பல்லாண்டு வாழ இறையருளைவேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்ற உணர்வு

## (Guilt Feelihg)

A. B வின்சன்ட்

இன்றைய உளவியல் விஞ்ஞான நடைமுறையில் குற்றவுணர்வு பற்றி பல்வேறுபட்ட எண்ணக் கருத்துக்கள் காணப்படுகின்றன. இங்கு குற்ற உணர்வானது மற்றைய மனவெழுச்சிகள் அல்லது உணர்வுகளில் (Emotions) இருந்து வேறுபடுகின்றது. பொதுவாக உளவியல் நிபுணர்கள் குற்ற உணர்வானது வெட்கத்துடன் (Shame) இணைந்து இருப்பதாகக் கூறுகின்றனர்.

உளவியல் நிபுணர் சிக்மண்ட் புறொய்ட் (Sigmand Freud) தனது கருத்துக்களை பாலியல் உளவியல் ( Psycho sexual) அடிப்படையில் ஐந்து கட்டங்களாக வகுத்து விளக்குகின்றார். ஆனால் எறிக் எறிக்சன் (Eriik Erikson) இன்னுமொருபடி ஏறி சமூக உளவியல் ( Psycho Social) சார்ந்த கட்டமைப்பினைக் கொண்டு ஆளுமை வளர்ச்சிப்படிகளை எட்டாக பிரிக்கின்றார். இங்கு அவரது இரண்டாவது படிநிலையில் தன்னாட்சி எதிர் வெட்கம் (Autonomy vs shame) அமைகின்றது. இங்கு தட்டிக் கொடுக்கப்படாத அல்லது பாராட்டப்படாத சந்தர்ப்பத்தில் குழந்தை வெட்கித் தலை குனிகின்றது. 'குழந்தை, பாடல் ஒன்றை பாடுகின்றபொழுது பெற்றோர் அல்லது பெரியோர் 'அட நன்றாக பாடுகிறாய் பள்ளிக்கூடத்தில் ரீச்சரா சொல்லிதந்தது' என்கின்றபொழுது குழந்தை சந்தோசப்படுகின்றது. ஆனால் 'உதென்னபாட்டு அந்தப் பிள்ளை உன்னைக் காட்டிலும் நன்றாக பாடும்' என்கின்ற பொழுது இப்பிள்ளை தலைகுனிந்து வெட்கப்படுகின்றது. இவ்வுணர்வானது பிற்கால வாழ்வில் ஆழ் மனதில் (Sub conscious) இருந்துகொண்டு வெளிச் செயற்பாடுகளை நிர்ணயிக்கின்றது என்பதனை எறிக் எறிக்சனின் கொள்கையுடன் புறொய்ட் கூறியதையும் இணைத்து நோக்குகையில் புலனாகின்றது. ஆனாலும் இன்னும் சில நிபுணர்கள் குற்ற உணர்வும், வெட்கமும் வெவ்வேறானது என்பதனை பின்வரும் நிகழ்வின் மூலம் காட்ட முற்படுகின்றார்கள்.

**1.** வயோதிப மாது ஒருவர் தனக்கு இறப்பு அண்மித்துவிட்டதை எண்ணி வருந்துகின்றார். அவள் தனது குருவானவரை அண்டிச் சென்று கதைக்க மறுக்கின்றாள் என்பதனை அறிந்து அவளது மகன் குருவை அழைக்கின்றான். அவருடன் அவள் கதைக்கின்றபோது பின் வருவன தெளிவாகின்றன. அவள் தனது வாழ்வில் ஒரு பிழைசெய்திருக்கின்றாள். ஆனால் அதனை இப்பொழுது நினைத்து வருந்துகின்றாள். தன்னுடைய வாழ்வு அர்த்த மற்றதொன்றாகக் கடந்துவிட்டதை எண்ணி வருந்துகின்றாள். தனக்கு மீண்டுமொருமுறை வாழக் கிடைக்குமெனின், பழைய வாழ்வு வாழ மாட்டாள் எனச் சூளுரைக்கின்றாள். குரு தனது சம்பாசனையைத் தொடர்கின்றபோது கண்டு கொள்ளுகின்ற உண்மை யாதெனின் அம்மாவிடம் குற்ற உணர்வினைக் காட்டிலும் வெட்க உணர்வு தலைதூக்கி நிற்பதாகும். ஏனெனில் அவளோ கடவுளது மன்னிப்பு பாவத்திற்கு உண்டென் பதனை ஏற்று கொள்ளுகின்றாள். ஆயினும் அவளை வாட்டுவது வெட்க உணர்வேயாகும்.

ஏனெனில் அவள் தனது குருவை அணுக மறப்பதற்கு காரணம், அவர் என்னை மதிப்பிறக்கம் செய்வாரா, அவர் என்னைப்பற்றி என்ன நினைப்பார், போன்ற உணர்வுகளே இது ஒட்டு மொத்தமாக வெட்க உணர்வேயாகும்.

எனவே இங்கு நாம் காண்பது மனசாட்சி (Conscience), குற்றம் (guilt) என்பன தவிர்க்கமுடியாத வகையில் இணைந்து காணப்படுகின்றன. ஒருவன் ஒரு தவறை செய்துவிட்டோமே என்ற காழ்ப்பணர்வே (Bitterfeeling) குற்ற உணர்வாகும். தான் குற்றவாளி என்ற நிலைப்பாடு ஒருவனை தாக்கி. ஒருவனது உணர்வுகளை அமுக்கி, அழுத்துகின்ற போது இவ்வகையான குற்ற உணர்வு ஏற்படுகின்றது. இதனை பின்வரும் நிகழ்வின் மூலம் விளக்க முனைகின்றார்கள் இன்னும் சில நிபுணர்கள்.

24 வயது உள்ள பெண் தனது விருப்பப்படி ஒடித் திருமணம் செய்து கொள்ளுகின்றாள். இதனை அவளது பெற்றோர் விரும்பவில்லை. எனவே அவளை ஒதுக்கித் தள்ளி வைத்துவிடுகின்றனர். அவளும் கணவனுடன் சென்று வேறொரு இடத்தில் குடியேறுகின்றாள். பெற்றோருடன் ஆன தொடர்பு முற்றாக தடைப்படுகின்றது. இது இவ்வாறு இருக்க அவள் கருவுறுகின்றாள். இதனை அறிந்த பெற்றோர் அவளது குழந்தைக்கு பரிசு பொருட்கள் அனுப்பிவைக்கின்றார்கள். தனது பிரசவம் அண்மித்துவிட அதனை பெற்றோருக்கு அறிவிக்கின்றாள். இந்நேரத்தில் பிரசவ வேளையில் குழந்தை இறந்துவிடுகின்றது. இதை அறியாத பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மகளையும் பேரக்குழந்தையையும் சந்திக்க வருகின்ற வேளையில், வீதி விபத்தில் இருவரும் இறந்துவிடுகின்றனர். இதனை அறிந்த மகள் மேலும் தாக்கப்பட்டு துன்ப சாகரத்தில் அமிழ்ந்து விடுகின்றாள். இங்கு அவளது பகைமை உணர்வு (Hostility), பெருந்தாக்கம் (Depression) அவளைக் குற்றவாளியாக்கி, அவள் தற்கொலைக்கு முயன்று காப்பாற்றப்படுகின்றாள். அய்யோ நான் என் பெற்றோருக்குக் கீழ் படியவில்லையே, அவர்களது சொல்லைக் கேட்க வில்லையே, அவர்கள் இப்பொழுது இறந்துவிட்டார்களே. நான் அவர்களைக்கொன்று கொலைகாரியாகிவிட்டேனே, அவர்கள் என்னை அன்பு செய்து பேணிப்பாதுகாத்தார்கள் ஆனால் நானோ கைமாறாக சொல்லுக் கேட்காமல், பெரிய பாதகியாகிவிட்டேனே. ஓ என் செல்லமே அய்யோ என்ர அம்மா! ஓ! கடவுளே நான் பெரும்பாவி என்ன செய்வேன்!'

இங்கு காட்டப்பட்ட உணர்வைத்தான் குற்ற உணர்வென் கின்றோம். உளவியல் நிபுணர்கள் அவளைக்கொண்டு அவளது குற்றத்தை மீட்டுப்பார்த்து, அவளை அந்த உணர்விற்குள். மீய்டும் கொண்டு சென்று புதிய வாழ்வு வாழ வழிசமைக்கின்றார்கள். இங்கு பல உளவியல் நிபுணர்களின் கருத்துப்படி குற்ற உணர்வானது, எப்பொழுது ஒருவன் சட்டத்திற்கு, மனசாட்சிக்கு, சமய சமூக ஒழுக்க நெறிகளுக்கு எதிராக செயற்படுகின்றானோ அப்பொழுது தோற்றம் பெறுகின்றது என்பதாகும். இதனைப் பல கூறு களாகப் பிரிக்கின்றார்கள்.

1. குற்றவாளி ஒருவர் தன்மீது கொண்டிருக்கும் குற்ற உணர்வு (Subjective guilt feeling)
2. குற்றவாளி ஒருவர்மீது பொதுப்படையில் மக்கள் கொண்டிருக்கும் குற்ற உணர்வு (Objective guilt feeling)
3. சட்ட ரீதியான குற்ற உணர்வு (Legal guilt feeling)
4. ஒழுக்க முறையிலான குற்ற உணர்வு (Moral guilt feeling)

இவற்றை ஒருமுகமாக நோக்கும் போது குற்ற உணர்வானது அநுகூலமான (Positive) பிரதிகூலமான (Negative) பங்களிப்பினை செய்கிறது எனலாம். ஒருவர் தான் 'குற்றவாளி, குற்றவாளி' என்று மீண்டும் மீண்டும் தன்னை நொந்து, வாட்டி வதைக்கின்றபோது அவர் அந்த உணர்விலேயே அமிழ்ந்து, தன்னை உடைத்து, வெறுத்து மனநோயாளியாக (Psychotic) நரம்பு கோளாறு உடையவராக (Neurotic) மாற்றுகின்ற தன்மை, பிரதி கூலமாக அமை கின்றது என்பதனைக் காட்டுகிறது ஆனாலும் அதே வேளையில் ஒருவர் தன்நிலையை உணர்ந்து அதாவது குற்ற நிலையை உணர்ந்து அதனை ஏற்று விழ்ப்புணர்வு (Awareness) அடைகின்றபொழுது அதிலிருந்து விடுதலை பெமுடிகின்றது அவர் ஒரு புது மனிதனாக மாறுகின்ற நிலை ஏற்படுகின்றது. இது குற்ற உணாவு அநுகூலமாக அமை கின்றது என்பதனை காட்டிநிற்கிறது.

மாட்டீன் பியூபர் (Martin Buber) எனும் நிபுணரின் கருத் துப்படி ஒருவர் தனது குற்ற உணர்விலிருந்து முழுமையாக விடுதலை பெறுவதற்கு குற்றத்தை உணர்வது போதுமானது அல்ல எனக்கூறுகின்றார். அதற்குரிய பிராயச்சித்தம் (Expiation) செய்யவேண்டும் உதாரணமாக:

"குமரன் கோபத்தினால் ரமணனுக்கு அடித்து விட்டான். குமரன் தனது குற்றநிலையை எண்ணி எண்ணி வருந்துவதனால் எந்தவித பலனும் இல்லை. மாறாக குமரன் ரமணனை சந்திக்கவேண்டும். அவனிடம் தன் செயலுக்கு மன்னிப்பு வேண்டவேண்டும். தங்களது உறவை உறுதிப் படுத்திக்கொள்ளவேண்டும். மீண்டும் பழைய நிலைக்கு செல்லுவதில்தான், மனித உறவை கட்டிக் கொள்ளு வதில்தான் குற்ற உணாவு செயலிழக்கும் எனவே குற்ற உணர்வு மனிதனை வளர்ச்சிக்கும் அதேவேளை தளர்ச் சிக்கும் இட்டுச்செல்லக் கூடியதொன்றாகவே காணப் படுகின்றது. ஒருவர் இவ்வுணர்வை கையாளுகின்ற தன்மை யிலேயே அதனுடைய தாக்கம் தங்கியுள்ளது.


நன்றி - "நான்"

# தவறுகள்!

தவறுகள் செய்தால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள், மூடி மறைக்க முயற்சிக்காதீர்கள், தவறுகளை மனந்திறந்து ஏற்றுக் கொள்ளுகின்ற போது அதன் பாதிப்புகளிலிருந்து விடுபட்டு விடு கிறீர்கள். தவறுகளை மூடிமறைக்க புதிய தவறு களைச் செய்ய வேண்டியிருக்கிறது. தவறுகள் நிரம்பிய மனம் குப்பைத் தொட்டியாகிவிடுகிறது. யோசித்துப் பார்த்தால் மனம் கெடுவதும் தூய்மை அடைவதும் நம்மைப் பொறுத்தேதான் அமை கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.ச. பாய்வா எழுதும் தொடர் நவீனம்.

அத்தியாயம் –04

கதிரவெளி, திருகோணமலை மாவட்டத்தின் கொட்டியாபுரம் பிரதேசத்தின் ஈச்சிலம்பற்றை, மல்லிகைத் தீவு, பள்ளிக் குடியிருப்பு போன்ற கிராமங்களுடன் மிக நெருங்கிய உறவினைக் கொண்ட கிராமம். வீரமும் துணிவும் இயற்கையிலே அமையப்பெற்ற சிந்து இனப் பரம்பரையின் வழித்தோன்றல்கள் தான் இங்கு வாழ்பவர்கள். குளக்கோட்டனால் கோணேசர் திருப்பணிக்காக விவசாயம் செய்யும் பொருட்டுத் தருவிக்கப்பட்டவர்கள்.

சந்திரனுக்கு ஈச்சிலம் பற்றை புதியதல்ல. ஓரிரு தடவைகளில் வெருகலாற்றைக் கடந்து அங்கு சென்று அந்த நீரை அருந்தி நீர்க்கடுப்பு வியாதியால் அவஸ்தைப்பட்டவன்தான். அப்பகுதிக் கிணறுகளில் ஒருவகைச் சுண்ணப் படிவுகள் இருப்பதால் பழக்கப்பட்டவர்களைத் தவிர ஏனையோருக்கு அது உபாதைநீர்தான். அவனந்தத் தண்ணீரை வெறுத்தானே யொழிய செண்பகத்தை வெறுக்கவில்லை. மதிய வேளை பார்த்து சந்திரன் ஆத்தையிடம் (சிறியதாய்) விடை பெற்று நேரே வீடு செல்லாமல், றேமன் வாடியில் முற்றுப்பெறாத முதலாவதுபாடு எப்பிடியிருக்குமென்பதை அறிய கடற்கரையை அண்டியபடி சென்று கொண்டிருந்தான். கடலினுள் சிறிது தூரத்தில் 'மண்டாடி' தனது தெற்பத்தில் மடிமுடிவதற்கு ஆயத்தம் செய்வது தெரிந்தது. வலை கரையேறக் குறைந்தது அரைமணி நேரமாவது ஆகுமென்று கணக்குப் போட்டுக் கொண்டான். நாவரண்டு தாகமெடுத்தது.

வாடியில் சென்று தண்ணீர் குடிப்பதற்கும் அவன் விரும்பவில்லை. தாகத்தால் சாவேனே தவிர இவர்களிடம் நீரருந்துவதில்லை யென்பது அவன் முடிவு. பெரிய ஆசார குலத்தவனில்லை யென்றாலும் இந்தக் கூட்டத்தினர் மட்டில் ஒருவகை அருவருப்பு.

இந்தக் கத்தோலிக்கச் சிங்களவர் ஆசாரமென்றால் என்ன வென்றே தெரியாதவர்களென்பது ஊரின் கணிப்பு. அவர்கள் தேவாலயத்தில் காணிக்கையாகக் கருவாடு கொண்டு செல்வதை விமர்சிப்பவர்கள். ஆனால் இதே சிங்களவர்கள், ஆலயப்பெருநாள் காலங்களில் குரங்கவித்த சட்டியில் மீன் சமைத்து நேர்த்திச் சோறு வழங்கும் போது மட்டும் ஆசாரங்களைத் தள்ளிவைத்து விடுவார்கள்.

சந்திரனுக்குத் தந்தையின் நினைவு வந்தது. சிறுவயதில் நேர்த்திச்சோறு வாங்கிவந்து தந்தையின் கையால் செம்மையாக வாங்கியதும் நினைவில் பசுமையாய் இருந்தது. இந்நேரம் சேகரிப்பு நிலையத்தில் பாலை அளந்திருப்பார். அவருடன் நேற்றும் சரியாகக் கதைத்துக் கொள்ளவில்லை உடன் புறப்பட்டான்.

அவன் நினைத்தது போல பால் முட்டிகள் வேலிக் கதியால்களில் உலர்வதற்காய் கவிழ்க்கப்பட்டிருந்தன.

'காஞ்ச எறச்சி சாப்பிட்டுப்பார்மன'

கந்தப்பர் பருவத்துக்கு முறுகியிருந்த மானிறைச்சித் துண்டொன்றைத் தெரிந்து மகனிடம் கொடுத்தார். தாயிடம் சிறிது வெங்காயமும் உரித்து வாங்கிக் கொண்டான்.

'என்ன எறச்செண்டு சொல்லு பாப்பம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேறென்ன குளுமாட்டச் சுட்டுக் காயவச்சி மரையெண்டு கொண்டு வருவானுகள் எனக் கெண்டா இது புடிபடல்ல'

'களப்பு மீனிலயும் மிசின் கோளிலயும் திண்டொனக்கு மானெறச்சியப்பத்தி என்ன தெரியும்.... மாடு மரயெண்டா எறச்சில மொச்ச மணமடிக்கும்.. எண்ணப் பிசுபிசுக் கும்.'

கந்தவனத்தார் . சொன்ன தொன்றும் சந்திரன் காதில் ஏற வில்லை. அவன் தான் காய்ந்த இறைச் சியில் ஐக்கியமாகிப் போனானே

தாய் அன்று விருந்தொன் றையே தயார் செய்திருந்தாள். கந்தப்பர், மகன் வந்த புளுகத்தில் கொஞ்சம் கசிப்பருந்தியிருந்தார்

'பாலுக்கு விலயக் கூட் டப்போறதா பேப்பரில பாத் தானான் மெய்தான....'

'ஓ ... சிங்களப் பகுதிகள்ல விலயக் கூட்டிப்போட்டுத்தான் பேப்பரில போடுவான்.

நமக்கெண்டா.. பேப்பரில போட்டாலும் கூட்டித் தரமாட்டான்'

'இல்லப்பா நீங்கல்லாம் இதெல்லாம் விசாரிக்கணும்...'

நம்மட பால்ல கொளுப்பக் கொறச்சிப்போட்டு பண்ணையில தண்ணிய ஊத்தி நல்லா சம்பாதிக் கிறானுகள்' நாம ராவுராவா நொளம்படிச்சி கஸ்டப்பட்டதான் மிச்சம் மேல்ல ஊத்த படாம இவனுகள் சம்பாதிக்கிறானுகள்.

'ஏம்பா..... நானும் யோசிச் சனான்தான் அம்பாறப் பக்கத்தில் இருக்கிறமாதிரி சங்கமொண்டத் தொடங்கலாமே! பாலுக்கு நல்ல விலயும், அநியாயத்தத் தட்டியும் கேக்கலாந்தானே.......

'இந்த ஊரிலிய ... சங்கம.. இவன் குடும்பியன் பளய விதான இருக்கமட்டும் இதெல்லாம் நடக்கிறத....'

'ஏன் ... அவரென்ன கொம்பா'

'பெரிய கொம்பெண்டு நெனப்புத்தான். அவனுக்குப் பின் னால நாலஞ்சி வாலுகள் அவனு கள்ற பாலுக்கெண்டா கொளுப்புக் கேத்த வெல வாயில்லாப் பூச்சிகள் பால ஊத்திட்டு வரவேண்டிய தான் கனக்கக் கதச்சா புளையண்டு பாலத் திருப்பிப் போடுவானுகள்.'

சந்திரனின் சீரம் நடுங்கி யது. விவசாயியை விட வியாபாரி லாபமடைவது விவசாயிடம் இருக் கும்வரை தரமற்றதாகக் கணிக்கப் பட்டதொன்று வியாபாரியின் கைக்கு மாறியவுடன் தரமானபொருளாவது. சமூகஅமைப்பின் இடைவெளியைத் தனதாக்கி இடைத்தரகன் புழுதிப டாமல் லாபமீட்டுவது எல்லாம் முத லாளித்துவப் போக்கில் மறுக்க முடியாதொன்றெனினும், கதிர வெளியைப் போன்ற கிராமங் களின் தலைவிதியை மாற்றத் தன் னைப் போன்ற பலர் உருவாக வேண்டி யதன் அவசியம் அவன் உணர்வு களுள் புதியதொரு உருவ மெடுப் பதை அவனால் உணர முடிந்தது.

'இண்டைக்கி வாக ரைக்கிப் போமிருக்க வேண்டிய பால்பண்ணய நம்மட ஊருக்கு கொண்டாந்த தாரெண்டு நெனச்சா? நம்மட அன்னமுத்தக்கட மகன் புசுப்பராசா இண்டைக்கி அவனுக் கெதிரா இவனுகள்.... மன .... நீ இதுக்கென்னெண்டாலுஞ் செய்ய ணும் ....' என்றவாறு பாயில் சிரிந்து கொண்டார்.

'மன, நாலுமணிக்கென்ன எளுப்பிவிட்ரு...'

எனச் சொன்னதிலிருந்து அவர் நிதானமமாயிருக்கிறார் எனப் புரிந்து கொண்டான்

கந்தவனத்தார் புளுகம் வந்தால் சிறிது மதுவருந் துவார் தவிர அவர் பெரிய மதுப்பிரியரல்ல சித்திரை வருடத்துக்குப்பிறகு மகன் வந்த புளுகத்தில் இன்று கொஞ்சம் குடித்திருந்தார்.

இவர்கள் சம்பாசனையைக் கேட்டுக்கொண்டிருந்த செல்லம்மா வுக்குப் பயம், மகன் ஏதாவது செயலில் இறங்கி விடுவானோ வென்று. குடும்பியர் அவனுக்குப் பெரியப்பா முறையான வர்தானே, அவர் தீமை செய்தவற்குச் சொந்த மென்று பாராதவரென்பதும் ஊர றிந்த விடயம்.

'நமக்கென்னத்துக்கு வம்ப.... பாலக் கொறச்சளந்தா புள்ளயாரவனக் கேப்பார்'

'நாமெல்லாம் கடவுளுக்குப் பயப்படுறத வச்சிக் கொண்டுதான் ஊரப்போட்டு மேய்க்கிறானுகள். இதுக்கு ஏதாவது செய்யத்தானம்மா வேணும்.'

'இதென்ன .. தனியச் செய்யிற விசயம...! பால் பண் ணமனேச்சர எதுத்து ஆரொன் னோட வரப்போறான்...'

'வாறானுகளோ இல்லயோ சனங்களுக்கு இதப்பத்திச் சொல்ல ணும். இது எங்கட பால், எங்கட பண்ண, எங்களுக்கில்லாத உரிம வேறாருக்கம்ம இருக்கு...'

'மொதல்ல சோதினய முடி.. அடிக்கிறவனடிச்சி மோதிறவன் மோதட்டும்...'

தாய் தனது விருப்பமின் மையைக் காட்டிவிட்டு எழுந்து கொண்டாள். சந்திரன் அன்றே அதற்கான விதையை ஊன்றத் தீர்மானித்துக் கொண்டான். அவன் ஆரம்பித்து வைத்த இளைஞர் கரப்பந்தாட்ட அணி இருப்பது அவனுக்கு உற்சாகத்தைக் கொடு த்தது. ◆

~ தொடரும் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவத்தில் வறுமை குறித்த கண்ணோட்டம்

பொதுவாக வறுமை என்பது, ஒரு மனிதனுடைய அத்தியாவசியத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாத குறைதகவு நிலை யாகும். சமயங்கள் ஏதோ ஒரு வகையில் அந்த நிலையில் இருந்து விடுதலை அடைவதற்கு அல்லது விடுவிப்பதற்கு சிந்தனை ரீதியாகவும் செயல்ரீதியாகவும், செயற்படுகின்றது.

நிறுவனமாக்கப்பட்ட சமயங்களில் வறுமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற போக்குக் காணப்படுகின்றது. இந்த வகையிலே கிறிஸ்தவம் கொள்கை ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் வறுமையை ஒழிக்கின்ற ஒரு நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. யேசு ஏழ்மையாகப் பிறந்து, ஏழ்மையாக வாழ்ந்து, ஏழைகளின் மத்தியில் பணிசெய்து, மக்களுக்காக மரித்தார். இந்தப் பின்னணியில் தோற்றம் பெற்ற திருச்சபையும் யேசு ஏழ்மையாக வாழ்ந்தார் என்பதை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது. கிறிஸ்தவம் ஆரம்பித்த போது கிறிஸ்துவின் பின் வந்த ஆரம்பக்கிறிஸ்தவர்கள் மூன்று அடிப்படைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அவற்றைக் கிரேக்கத்தில் கெரிக்மா, கொய்நோனியா, டயக்கோணியா எனக் குறிப்பிடுகின்றனர். அவை முறையே, யேசுவின் போதனைகளைக் கூறுதல், அப்போதனைகளை ஏற்ற கூட்டம், அக்கூட்டத்துக்குப் பணி செய்தல் எனப் பொருள்கொள்ளப் படுகின்றது.

திருச்சபை தனது வரலாற்றிலே ஆதி முதல் இன்றுவரை டயக்கோணியா, என்ற பணியைச் சிறப்பாகச் செய்துவருகின்றது. திருவிவிலியத்தில் திருத்தூதர்பணி 7ம் அதி காரத்தில் டயக்கோணியா பற்றிக் காணலாம். ஆரம்பத்தில் ஏழைகளையும், விதவைகளையும் பராமரிக்க 7பேர் நியமிக்கப்பட்டனர். இந்த 7 பேருடன் தான் டயக்கோணியா ஆரம்பிக்கப்பட்டது. தொடக்கத்தில் ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்தனர். அதன்பின் பாடசாலைகள், வைத்திய சாலைகள் உருவாக்கப்பட்டது. இதுவும் மக்களின் வறுமையை இல்லாமல் செய்ய எடுக்கப்பட்ட முயற்சியே.

ஆரம்பம் முதல் திருச்சபை ஏழை எளியவர்களுக்குப் பணி செய்யும் ஓர் அமைப்பாகவே இருந்து வருகிறது. இதற்குக் காரணம், யேசுவின் போதனைகளாகும். யேசுவின் போதனைகளிலே இரண்டுவிதமான உருவகங்கள் உண்டு. அவை உப்பு, ஒளி என்பனவாகும். உப்பு பிரயோசனமாகப் பயன்படுத்தப்படுவதற்கு அது பூரணமாகக் கரைய வேண்டும். அப்போதுதான் அது அந்தப் பொருளோடு சேரும். அதே போல், மனிதனும் சேவையில் ஊறித்திளைக்க வேண்டும். இதனாலேயே "உலகிற்கு உப்பு நீங்கள்" என்று யேசு மொழிந்தார். ஒளி எல்லா இடமும் கலந்து இருளுள்ள இடத்துக்கு ஊடுருவ வேண்டும். மெழுகுத்திரியானது தன்னை அழித்து மற்றவர்களுக்கு ஒளி கொடுப்பது போல, ஒவ் வொருவரும் மற்றவர்களது வாழ்க்கைக்கு ஒளியாக இருக்க வேண்டும். இதுவே யேசுவின் வாழ்வின் சாரம். யேசுவின் போதனைகளில் முக்கியமானது அன்பு. "உன்னை நேசிப்பது போல் உன் அயலானையும் நேசி" என்றார். இந்த அன்பு ஏழைகள், மட்டில் ஏற்படும் கரிசனைக்கு அத்திவாரமும், ஒரு மைல்கல்லுமாகக் காணப்படுகின்றது.

லூக் : 16 இல் செல்வரும் இலாசரும் பற்றி கூறப்படுகின்றது. செல்வந்தனாக இருந்தாலும் அவனது வீட்டு வாசலில் இருந்த ஏழை இலாசருக்கு உதவாததால் அச்செல்வந்தன் நரகத்துக்குப் போனார் எனப்படுகிறது. இதிலிருந்து ஏழைகளுக்கு உதவுவதால் மோட்சம் உண்டு என்பது தெளிவாகிறது.

தி.பா 41:1 இல் "எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறுபெற்றவர். துன்ப நாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார்" எனப் படுகின்றது. அதாவது, ஒருவன் ஏழைக்கு உதவுவானேயானால் அவன் இன்னல், இக் கட்டுக்களில் இருந்து விடுபடுவான் எனப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இதிலிருந்து ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது முக்கியத்துவப் படுத்தப் படுகின்றது.

யேசுவின் அன்புப் பணியை அன்னை திரேசா மேற்கொண்டார். இவர் யேசுவின் வழியிலே எங்கெல்லாம் மக்கள் தாழ்த்தப்பட்டு, அடக்கப்பட்டு, அனாதைகளாக்கப்பட்டு வறுமையில் வாழ்ந்தார்களோ அவர்களுக்குக் கருணை காட்டி, அவர்களது பசிப்பிணியை நீக்கப் பணியாற்றினார். "ஏழைகளின் முகத்திலே நான் யேசுவையே பார்க்கின்றேன்" என்றார். இரக்கம் காட்டல், கருணை காட்டல் மட்டும் வறுமையை ஒழிக்கப்போதாது என்பது தற்போது உணரப் படுகிறது. விடுதலை இறையியலாளர்கள் இது பற்றித் தெளிவான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இந்த விடுதலை இறையியலின் முக்கிய நோக்கம் ஏழ்மைக்கு உதவுவதை விட ஏழ்மைக்கான காரணத்தை அறிய முற்பட வேண்டும் என்பதாகும். உதாரணமாக ஒரு சீனப் பழமொழியின் கருத்து, "பசிப்பவனுக்கு மீனை கொடுத்தால் அடுத்தநாளும் அவன் வருவான். ஆனால் மீன் பிடிக்க கற்றுக் கொடுத்தால் அவன் வரமாட்டான்" என்பதாகும். இதையே விடுதலை இறையியல் செய்தது.

இதனால் தான், வறுமைக்கான காரணம் பெரும்பாலும் சமூக அமைப்புதான் எனவும், ஆகவே சமூக சேவையை விட சமூக அமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என விடுதலை இறையியல் கூறியது. இதனால் திருச்சபையும், சமூகசேவை, சமூக அமைப்பு நடவடிக்கை என்பனவற்றை சிறப்பாக மேற்கொண்டு வரு கிறது. எடுத்துக்காட்டாக, வடக்கு கிழக்கில் யுத்தத்தால் ஏற்படும் வறுமையைத் தடுக்க திருச்சபை, அகதிகள் உள்ள இடத்துக்குச் சென்று உதவுதல் மூலம் சமூகசேவை செய்கிறது. சமூக அமைப்பு நடவடிக்கையாக, போருக்கான காரணத்தைக் கண்டுபிடித்து சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்கிறது.

அண்மைக் காலத்தில் சமூக அமைப்பு நடவடிக்கைகளை கூடுதலாக நடைமுறைப் படுத்த திருச்சபை முயற்சிக்கின்றது. ஆனால், சமூக அமைப்பு நடவடிக்கைகள் கடினமான விடயமாகக் கருதப்படுகின்றது. ஆகவே தான் திருச்சபை பிற்காலத்தில் சமூக சேவையில் தன்னை ஒருவர் முற்றுமுழுதாக இழந்து விட முடியாது எனவும், சமூக அமைப்பு நடவடிக்கைகளில் தான் அவ்வாறு செய்யலாம் எனக்கூறுகின்றது தன்னை இழந்து பணிசெய்ய வேண்டும்" என்ற போதனையை நடைமுறைப்படுத்த, திருச்சபை சமூக அமைப்பு நடைமுறைகளைக் கூடுதலாக மேற் கொள்கிறது.

கத்தோலிக்க திருச்சபையானது, பெரும்பாலும் மக்களின் வறுமையை இல்லாமல் செய்வதற்கு முனைகிறது. அதேவேளை ஏழ்மைக்கான காரணத்தைக் கண்டு அதற்கு எதிராக அரசியல் ரீதியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் குரல் கொடுக்கிறது.

கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரையில் வறுமை ஒழிப்பு இதன் அடிப்படை அம்சங்களில் ஒன்று. அதற்கான உந்துசக்தியை திருச்சபையின் ஸ்தாபகரான யேசுவிடம் இருந்தே திருச்சபை பெற்றது. எனவேதான் திருச்சபையானது, தற்காலங்களில் சமூகசேவை, சமூக அமைப்பு நடவடிக்கை இரண்டையும் வறுமையை ஒழிக்கக் கையாண்டு வருகின்றது. ●

அ. சுதர்சினி செறின்
*கல்லாறு.*

## கத்தோலிக்க எழுத்தாளர்களின் விபரப்பட்டியல் தயாரிப்பு

கத்தோலிக்க எழுத்தாளர்களது விபரப்பட்டியல் ஒன்றைத் தொகுப்பதற்கு "பாதுகாவலன்" பத்திரிகை நடவடிக்கை எடுத்து வருகிறது. கத்தோலிக்க எழுத்தாளர்கள் தங்கள் பெயர், பிறந்த திகதி, முகவரி, ஆக்கங்கள், பெற்ற பரிசுகள், விருதுகள் போன்றவற்றின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகிறார்கள். நிழற்படம் ஒன்றையும் அனுப்பி வைக்கலாம். அத்துடன் இறந்துபோன எழுத்தாளர்கள், மற்றும் புலம் பெயர்ந்துபோன எழுத்துாளர்கள் ஆகியோரின் விபரங்களைத் தெரிந்தவர்கள், அவைகளையும் தந்துதவுமாறு கேட்கப்படுகிறார்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**ஆசிரியர், 'பாதுகாவலன்',**
**கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதத்துவத்தில் புனிதத்துவம்

அ. மரினா
திருகோணமலை

சமத்துவமான முறையிலே மனித மனங்களுக்கிடையே ஏற்படுகின்ற அன்பே மனித சமுதாயத்தின் உயிராகும், ஆண்டான், அடிமை, பெரியோன் சிறியோன், உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்ற பாகுபாடு எதுவுமின்றி வெளிக் காட்டப்படும் அன்பே மனிதத்துவத்தில் புனிதத் துவமாகும்.

'ஒன்றே குலம்
ஒருவனே தெய்வம்'
'அன்பே கடவுள்'
'அன்பே சிவம்'

என்று சமயங்களின் சித்தாந்தங்களில் ஒற்றுமை காணப்பட 'நான், எனது சாதி, எனது சமயம், எனது சமூகம், எனது குடும்பம் மட்டும் வாழ வேண்டும் ஆட்சி செலுத்த வேண்டும்' என்று பாராபட்சங்களையும் பிரிவினைகளையும் பலப்படுத்தி வருகின்ற சமுதாய அமைப்புக்களிலே புனிதத்துவத்தைத் காணமுடியாது. சமுதாய நலன்சார் வளர்ச்சி என்பது மனித நேயம், சமத்துவம் சகோதரத்துவநிலை. அன்பு, விட்டுக் கொடுத்தல், மன்னிப்பு போன்றன வளர வேண்டும். அதே வேளை எத்தொழில் செய்தாலும் மனிதனை மனிதனாய்க் காண்கின்ற மனப்பாங்கும், அவனை அவனாக, அவளை அவளாக கருத்தில் கொண்டு செயற்படும் பொழுது அங்கு இறை பிரசன்னமும், இறை விழுமியங்களும் விதைக்கப்பட்டு மனிதத்துவத்தில் புனிதத்துவம் வளரும். ◆

# ஒரு வித்தியாசம்

வேதாந்தியொருவர் ஒரு பரிசுத்தவானிடம் சென்று மக்கள் உம்மைப் பரிசுத்தர் என்று போற்றுவது ஏன் என்று கேட்டார்.

'அன்பினாலும் மரியாதையினாலுமே' என்று விடை பகர்ந்த அத்துயவர் 'அவர்களைப் போலவே நானும் ஒரு பாவி, கடவுளுடைய மட்டற்ற கிருபையினாலும் இரக்கத்தினாலும் மட்டுமே மீட்கப்பட்டுள்ளேன் என்று அறிக்கை இட்டார். அப்போது அந்த வேதாந்த நிபுணர் அப்படியானால் உமக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன, என்று கேட்டார். அதற்கு அந்த உத்தமர்.

சாக்கிரட்டிசைப் பற்றி உமக்குத் தெரியும் தனக்கு ஒன்றுமே தெரியாதென்று தான் தெரிந்து கொண்டதாக அவர் ஒரு நாள் அறிவித்தார். வேதாந்தியான அவருக்கு ஒன்றுமே தெரியாதென்றால், அவருக்கும் மூடரான மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று மக்கள் அவரைக் கேட்டனர் 'எனக்கு ஒன்றுமே தெரியாதென்று எனக்குத் தெரியும் மற்றவர்களுக்கோ, தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்பது தெரியாது' என்றாராம். அதேபோன்றுதான் எனக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வித்தியாசமிருக்கிறது. நான் பாவியென்று நானே அறிந்திருக்கிறேன் மற்றவர்களோ, தாங்கள் பாவிகளென்பதை அறியாதிருக் கிறார்கள். ஆகையால்தான் தங்கள் மீட்பைக் குறித்து அலட்சியம் கொண்டிருக்கிறார்கள் என்றார். வேதாந்தி வாய் மூடி மௌனியா கிவிட்டார்.

– சாது சுந்தர்சிங் குமட்டிக் கதைகள் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைப்பதெல்லாம்



அந்தோனியின் குடும்பம் கொஞ்சம் கஷ்டமான குடும்பம் தான். அந்தோனியின் மனைவி மேரி நல்ல குணம் உள்ளவள். அவர்களுக்கு அன்னை மேரி, அமலோற்பவம், மாட்டீன், மதலேனம்மாள் என்று நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். அதில் அன்னை மேரிகலியாணம் கட்டி இரு குழந்தைக் குத் தாயாகி விட்டாள். அமலோற்பவம் வீட்டில் சும்மா தான் இருக்கின்றாள். மாட்டீனும் மதலேனம்மாளும் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தனர்.

அமலோற்பவத்திற்கு சூசைதாசை கட்டி வைக்க எல்லோரும் விரும்பினர். சூசைதாசின் குடும்பம் கொஞ்சம் வசதியான குடும்பம். அவர்கள் பெண் வீட்டாரிடம் பத்துப் பவுண் நகையும் ஓர் இலட்சம் ரூபாய் பணமும் கேட்டான். அதில் ஐந்து பவுன் நகையையும் ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தையும் கலியாணத் தண்டு தருவதாகப் பெண் வீட்டார் கூறியிருந்தார்கள்.

குறித்த நாளில் அமலோற்பவத்திற்கும் சூசைதாசுக்கும் திருமணம் நடைபெறவிருந்தது. சரியான முகூர்த்த நேரம் வந்ததும் மாப்பிள்ளை தாலியை பெண்ணின் கழுத்தில் கட்ட ஆயத்தமானார். அந்த நேரம் சூசைதாசன் தகப்பன் சூசைமுத்து கத்தும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான் சூசை தாசன். தன் தகப்பன் பெண்ணின் தகப்பனான அந்தோனியிடம் 'சொன்னமாதிரி இருக் கோனும்.... அண்டைக்கு வெத்திலை பாக்கு மாந்தறநேரம் சொன்ன மாதிரி மீதிப் பணத்தையும் நகையையும் இப்ப தந்தால்தான் என்ட மகன் உங்கட மகளுக்கு தாலி கட்டு வான்'' என்று கூறினார்.

பெண்ணின் தகப்பன். "நான் சொன்ன சொல் தவறமாட்டன். எண்ணி ஒரு மாசத்தில பாக்கிப் பணத்தையும் நகையையும் கொண்டு வந்து தாறன் என்று இந்த சபை அறிய வாக்குத் தாறன்.... மாப்பிள்ளையை தாலி கட்டச் சொல்லுங்க. என்று கெஞ்சினார்."ஓம்..... நிச்சய தார்த்தத்துல சொன்ன வாக்கை காத்துல பறக்க விட்டாச்சு.... இப்ப இதையும் நம்பச் சொல்லுறீங்களா சொன்னது வராம என்டமகன் தாலி கட்டமாட்டான்" விறைப்பாக இருந்தார் சூசைமுத்து. தமிழ்ச் சினிமா காட்சி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அந்தோனி கையைப் பிசைந்தார். கண்களில் நீருடன் கழுத்தில் இருந்த மாலையை ஆணியில் மாட்டி விட்டு கலங்கினாள் அமலோற்பவம். இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாமலிருந்த சூசைதாசை, "சீ....., இவனும் ஒரு ஆண்பிள்ளையா... மிருகம்" என உள்ளுக்குள் வெடித்தாள் அமலோற்பவம்.

திடீரென்று ஒரு பரபரப்பு "ஐயா... ஐயா... மாப்பிள்ளைக்கு திடீர்னு கையையும் காலையும் வெட்டி வெட்டி இழுக்குது. வாயில் நுரை தள்ளுது...." என்று ஒரு பையன் சூசைமுத்திடம் மூச்சிரைக்க சொன்னான். சூசைமுத்துவின் முகத்தில் இலேசான கலவரம். "இது என்ன.... இந்த நேரத்தில...... என்று ஒரு சலனம். மகன் இருக்குமிடம் நோக்கி ஓடி வந்தார். சூசைதாசின் கையில் ஒருவர் சாவிக் கொத்தை கொடுத்துக் கொண்டிருந்தார். இன்னொருவர் சோடா உடைத்துக் கொண்டிருந்தார். சிலர் கையையும் காலையும் பிடித்துக் கொண்டனர். சூசை முத்துவின் மனதில் புளுக்கம் உருவாகியது. ஐயோ.... இத்தனை பேர் கண் முன்னால் இது நடந்து விட்டதே.... இனிமேல் யார் பெண் கொடுக்க முன் வருவார்கள்?...... என்று குழம்பிக் குழம்பி இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் தகப்பனிடம் "கோவிக்காதீங்க. உங்க நிலைமையை புரிஞ்சுகொள்ளாம எடுத்தெறிஞ்சு பேசிட்டன்.... நீங்க ஒண்டும் தரத் தேவல்ல..... பிள்ளையக் கூப்பிடுங்க கெதியா தாலியக் கட்டுவம்" என்று குழைந்தார் சூசை முத்து. இப்போது அந்தோனிக்கு உச்சக் கட்டம். "இல்ல... தெரியாமல்தான் கேட்கிறன்.... என்ட மகளுக்கு அழகுல குறைச்சலா.... அடக்கத்தில குறைச்லா.... அப்படி இருக்க வலிப்பு வாற உங்கட மகனை எங்கட மகள்ற தலையில கட்டலாமெண்டு பார்க்கிறீரா... அதான் நடக்காது... வேற இடம்பாரும். "என்று இரைந்தார் அந்தோனி. ஆனால் அமலோற்பவத்தின் மனத்திலோ ஒரு குரூர எண்ணம்." இத்தனை பேர் மத்தியில் தன் குடும்பத்தை அவமானப் படுத்திய இந்தக் குடும்பத்திலேயே மருமகளாகி இவர்களை ஆட்டிப் படைத்தால் என்ன...? நிமிஷத்தில் தன்னை மாற்றிக் கொண்டவள்.

"அப்பா.... என்ன பேச்சுப் பேசுறீங்க....? பிள்ளை வீட்டார் நிமிஷத்துக்கு ஒரு தரம் மாறினா... நீங்களும், கூடவா?.......நான் இவரையே கலியாணம் பண்ணப் போறன்.... எந்த நோயா இருந்தாலும் சரி என்னோட மனவலியால குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு.... இருக்கு மாமா அவரைக் கூப் பிட்டு தாலி கட்டச் சொல்லுங்க..." என்று மணவறையில் போய் அமர்ந்தாள். "நீ எங்க வீட்டுக்கு தெய்வமம்மா..." என்று உருகினார் சூசை முத்து. அடிமை நம்பர் வன் என்று மனத்தில் கொக்கரித்தபடி கணக்கிட்டாள் அமலோற்பவம். முதலிரவு

"என்னை மன்னிச்சிடு அமலா" என்ற சூசைதாசின் வாயை தன் பூங்கரங்களால் பொத்தினாள் அமலோற்பவம். தன்னை தியாகி... என்று பாராட்டப் போகிறான் என்ற இறுமாப்பில் இருந்த அமலோற்பவம். தன் பெருந்தன்மையை மேலும் காட்ட நினைத்து "அப்படியெல்லாம் பேசாதீங்க... உங்களிட்ட இருக்கிற குறையை நான் மறந்திற்றன்... ஆனா ஒண்டு, நான் சொல்றபடி நடந்தீங்கெண்டா நான் பார்த்துக்கொள்ளுவன் அம்மா, அப்பா பிள்ளையா இருக்கக் கூடாது... என்னோட அட்ஜஸ்ட் பண்ணி நடக்கோணும்.." என்று அடிமைத் தனத்துக்கு அத்திவாரம் போட்டாள். "... ஐ ஆம் ஸாரி... அமலா... நான் உண்மையை சொல்றது நல்லம் என நினைக்கிறன். எனக்கு வலிப்பும் இல்ல... கிலிப்பும் இல்ல... நல்ல ஹெல்த் கண்டிஷனில் உள்ளவன் நான். வேணுமானால் நீ சொல்கிற டாக்டரிடம் செக்அப் பண்ணிக்கலாம்... நான் வலிப்பு மாதிரி செய்தது ஒரு சின்ன டிராமா... ஏன்..? எதற்காக...? சீர் கேட்டு எங்கப்பா உங்கப்பாவிடம் கை நீட்டினது எனக்குப் பிடிக்கல்ல... அதோட, கேவலம் இந்த பணத்திற்காக ஒரு பெண்ணோட வாழ்க்கை பாதிக்கக் கூடாது. பாதியிலே கல்யாணம் நின்று போன அபசகுனம் பிடித்த பெண் என்ற பட்டம் உனக்கு கிடைத்து விடும். இதனால உன்னோட எதிர்காலம் பாழாகி விடும் என்பதற்காக தான் இவ்வாறு நடிச்சேன். அப்படி நடிச்சா அப்பா சரணடைவார் என்பது எனக்கு தெரியும்... அதனால் எனக்கு இல்லாத வலிப்பை பயன் படுத்தி ஏதாவது ஆதாயம் தேட நினைச்சா அது குழந்தைத் தனமானது. இதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிஞ்சா... உனக்கும் நல்லது... எனக்கும் நல்லது. அதே நேரத்தில, நியாயமான எந்த உணர்வுக்கும் நிச்சயம் நான் உன் பக்கம் இருப்பேன்... கவலைப்படாதே... என்று சூசைதாஸ் கூறி முடித் தான்.

ஒரு குழந்தையைப் போல் கூனிக்குறுகி சூசை தாசின் கால்களில் விழுந்து தன்னுடைய கர்வத்தையும் கெட்ட எண்ணத்தையும் கண்ணீரில் கரைத்தாள் அமலோற்பவம்.

**பெ. அனக்கிளேற்**
**சொறிக்கல்முனை**

## மன்னிப்பு

பிறரை மன்னிக்கும்போது அவர்களுக்கு நாம் நன்மை செய்யவில்லை. நமக்குத்தான் நாம் நன்மை செய்து கொள்கின்றோம். மன்னிக்கும்போது வெறுப்பு கோபம் போன்ற தீய குணங்கள் நம்மை விட்டு நீங்கிவிடுகின்றன. மனம் மகிழ்ச்சி நிலையைப் பெற்று விடுகின்றது. மகிழ்ச்சியாக இருப்பதும், இல்லாமல் இருப்பதும் நம்மைப் பொறுத்த விடயங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப்போட்டி !

**பிள்ளைகளுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி 30-03-2002**

**விவிலியம் கற்போம் போம் -15**

## எகிப்து சென்ற பென்யமினும் காணாமற் போன வெள்ளிக் கோப்பையும்

(தொடக்கநூல் 43 : 12 ~ 34, 44 : 1 ~ 5)

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக**

யாக்கோப்பின் புதல்வர்கள் மீண்டும் எகிப்துக்குச் சென்ற போது, பென்யமினையும் அவர்களோடு அழைத்துச்சென்றனர். யோசேப்பு இவர்களைக் கண்டவுடன் தம்வீட்டு .............................. நோக்கி, 'இம்மனிதர்களை என் வீட்டிற்கு அழைத்துச் செல். இவர்கள் .............................. இன்று என்னோடு உண்பார்கள். கால்நடை ஒன்றை அடித்து உணவு தயார் செய்/ என்று கட்டளையிட அவனும் அவ்வாறே செய்தான். யோசேப்பு வீட்டுக்கு வந்ததும், வீட்டுக்குள் அவர்கள் கொண்டுவந்திருந்த .............................. அவர்முன் வைத்து, தரைமட்டும் தாழ்ந்து வணங்கினர். அவரோ அவர்களிடம் .............................. விசாரித்த பின், 'நீங்கள் என்னிடம் சொல்லியிருந்த உங்கள் .............................. சகோதரன் இவன்தானா? என்று கேட்ட பின் 'மகனே கடவுள் உனக்கு அருள்புரிவாராக' என்றார். யோசேப்பு தன் சகோதரனைக் கண்டு மனம் நெகிழ்ந்து, தம்.............................. விரைந்துசென்று கண்ணீர்விட்டார். பின்னர் யோசேப்பு தம் வீட்டு மேற்பார்வையாளனிடம் அவர்களுடைய .............................. பைகளில் அவர்கள் தூக்கிச் செல்லுமளவு தானியம் நிரப்பி, அவனவன் பணத்தை கோணிப்பை வாயில் .............................. கட்டிவிடு, இளையவனது கோணிப்பை வாயில் .............................. வெள்ளிக் கோப்பையையும் அவன் பணத்தையும் கட்டிவிடு' என்று கட்டளையிட்டார். அவ்வாறு நடந்து முடிந்ததை அறியாத சகோதரர்கள் மறுநாட் காலையில் புறப்பட்டனர். பின்னர் யோசேப்பு மேற்பார்வையாளனிடம் அவர்களைத் துரத்திப்பிடித்து, 'நன்மைக்கு .............................. நீங்கள் தீமை செய்வது ஏன்? என்று அவர்களை அழைத்துவரும்படி கட்டளையிட்டார்.

**விடைகள்:**

பகலுணவை காணிக்கைகளை நலம் மேற்பார்வையாளனை

இளைய கோணிப் வைத்து உள்ளறைக்குள் எனது கைமாறாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி 30. 03.2002

# பரிசுப்போட்டி

## அறிவை வளர்ப்போம் ~ 15

**(சரியான விடையைத் தெரிவு செய்து அடிக்கோடிடுக)**

1) ஜப்பானில் முதலாவது அணுகுண்டு போடப்பட்ட ஆண்டு
*( 1943, 1945, 1944 )*

2) 400 விக்கட்டுக்களைக் கைப்பற்றிய இலங்கை வீரர்
*( சமிந்தவாஸ், தர்மசேன, முத்தையா முரளிதரன் )*

3) இலங்கைப் பராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர்
*( S. சுந்தரலிங்கம். ஜி. ஜி. பொன்னம்பலம் , A. அமிர்தலிங்கம் )*

4) பொதிய மலையிலிருந்து தமிழ் வளர்த்தவர்
*( அகத்தியர், தொல்காப்பியர், நக்கீரர், )*

5) நமது உடலில் தேவைக்கு அதிகமாக உள்ள குக்கோசைக் கொழுப்பாக மாற்றி சேமித்துவைக்கும் உறுப்பு
*( நுரையீரல், கல்லீரல், இரைப்பை )*

6) தமிழ்மொழியில் ஒப்பியலகராதி படைத்த இலங்கை அறிஞர்
*(ஆறுமுகநாவலர், பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை, நல்லூர் சுவாமி, ஞானப்பிரகாசர்)*

பெயர் ..............................................................................................

முகவரி ............................................................................................

அனுப்ப வேண்டிய முகவரி

**விவிலியம் கற்போம் – 15 / அறிவை வளர்ப்போம் 15**
**தொண்டன்**
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 15 விடைகள்

1) ஔவையார் 2) டங்கன்வைட் 3) பேரீச்சை 4) வியாழன்
5) இந்தோனேஷியா 6) வால்ட்விட்மன்

---

# விவிலியம் கற்போம் - 15 விடைகள்

1) தானியம் 2) பென்யமினை 3) தரைமட்டும் 4) ஒற்றர்கள் 5) உணவு
6) கானான் 7) சகோதரன் 8) சிறையில் 9) மூன்றாம் 10) சிமியோனை

## 100/- பரிசு பெறுவோர்

ஜெரோம் ஜீவகாந்த்
5/4 மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.

A. தயான்
56/12, 3ம் குறுக்குத்தெரு,
மட்டக்களப்பு.

## 50/- பரிசு பெறுவோர்

ஜூலி கிளேறியன்ஸ்
இசை நடனக் கல்லூரி வீதி
நொச்சிமுனை
மட்டக்களப்பு

சூ. பிறிண்டா
3ம் வட்டாரம்
நிலாவெளி

## பாராட்டுப் பெறுவோர்

1. டினோன்ரொனி கிறிஸ்ரோறெக்ஸ்
புனித திரேசாள் ஆலயம்
வாழைச்சேனை

2. அருள்தாசன் டினுஷா
மாயழகு வீதி
அக்கரைப்பற்று - 9

3. D. தாமஸ்
புனித அந்தோணியார் ஆலயம்
மொனராகல

4. சிரோன் பெர்னான்டோ யூபராஜா
158 திருமலை வீதி
மட்டக்களப்பு

**போட்டியில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.



# காற்றில் கலந்துவரும்...

## கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள், தமிழ்
## மார்ச் – 2002

நிகழ்ச்சித் தொகுப்பு
மலர்வேந்தன்

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் – காலை 5.50 மணி**

நாள் :- 09, 10, 11, 12, 13, 14, 15
23, 24, 25, 26, 27, 28, 29

**கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி (சிறுவர் உலகம்) – மாலை 7.45 மணி**

நாள் :- 05, 19

**வளர்ந்தோர் நிகழ்ச்சி (புதிய உலகம்) – மாலை 7.00 மணி**

நாள் :- 03, 17, 31

தொடர்பு:
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

**குறிப்பு**

தவக்கால வெள்ளிகள் தோறும் சிறப்பு நிகழ்ச்சிகள் மாலை 5.00 மணிக்கு ஒலிபரப்பாகின்றன.

---

## வல்லமை கீதங்கள் ஒப்புரவு வல்லமை



## ஒலி நாடாக்கள் வெளியீடு




தேற்றாந்தீவு பங்குத்தந்தை அருள்தந்தை போல் றொபின்சன் அவர்களால் தயாரிக்கப்பட்ட இரண்டு ஒலி நடாக்கள் (வல்லமை கீதங்கள், ஒப்புரவு வல்லமை) கடந்த மாதம் (பெப்ரவரி) வெளியிட்டு வைக்கப்பட்டது

பாடல்களையும், உரைகளையும் கொண்ட இவ் ஒலி நாடாக்கள் தமிழகத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. பிரபல தென்னிந்தியப் பாடகர்கள் மனோ, சுவர்ணலதா ஆகியோரும் இணைந்து பாடியுள்ளனர் C.D பிரதிகளாகவும் இவை வெளி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள அருளுரைகளும், பாடல்களும் அடங்கிய இவ்வொலி நாடாக்கள் ஆன்மீக மறுமலர்ச்சியை ஊட்டி புதுவாழ்வுக்கு அழைத்துச் செல்லும் என்று நம்புகின்றோம் வாழ்த்துக்கள்!!

St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Designation - St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org